Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 81

செவ்வாய்க்கிழமை
15 பெப்ரவரி 2022

மாசி 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

## இணையசேவையில் இடையூறு

கொழும்பு, பெப். 15
இந்து சமுத்திரத்தில், கடலுக்கு அடியில் காணப்படும், இணையத்தள வசதியை வழங்கும் சர்வதேச நீர்மூழ்கிக் கேபிள் கட்டமைப்பில் கோளாறு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சர்வதேச நீர்மூழ் 15

குடாநாட்டில் டெங்கு தீவிரம்:

# இளையோர் இருவர் ஒரேநாளில் சாவு!!!

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு




வ. அஜய்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 15

யாழ்ப்பாணக் குடாநாட்டில் டெங்கு நோயின் தாக்கம் தீவிரமடைந்துள்ளது. ஒரேநாளில் 11 வயதுச் சிறுவன் மற்றும் 18 வயது இளம் பெண் என இருவர் உயிரிழந்துள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 02

## இலங்கையின் பொறுப்புக்கூறல்: வட்டமேசைக் கலந்தாய்வு இன்று

ஜோகன்னஸ்பேர்க், பெப். 15
இலங்கையில் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறலுக்கான போராட்டம் பற்றிக் கலந்துரையாடுவதற்கு உலகம் 15

## தமிழ்த் தேசியக் கட்சிகளின் கருத்தரங்கம் நாளை

யாழ்ப்பாணம், பெப். 15
ஈழத்தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கானதீர்வும் தேசிய, பிராந்திய, சர்வதேச நிலைவரங்களும் எனும் 15

## மார்ச் 18 இல் வருகிறார் ஜெய்சங்கர்!

கொழும்பு, பெப். 15
இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் மார்ச் 18 ஆம் திகதி இலங்கை 15

## கொள்ளை

யாழ்ப்பாணம், பெப். 15
அச்சுவேலி கதிரிப்பாயில் நேற்றுமுன்தினம் இரவு வீடு புகுந்த கொள்ளையர்கள் வீட்டில் இருந்தவர்களை கத்தி முனையில் அச்சுறுத்தி 15 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துள்ளனர். வீட்டுக் கதவைப் 15

## தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 15
தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அளவெட்டி மேற்குப் பகுதியில் நேற்று அதிகாலை 12:15 மணியளவில் முன்னாள் பிரதேசசபை உறுப்பினரின் வீடுமீது வன்முறைக்கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வலி.வடக்கு முன்னாள் பிரதேசசபை உறுப்பினரான ந.புரட்சிதாசனின் வீடே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. 15

சுகாதார தொழிற்சங்கங்கள்

## கோரிக்கை முழக்கம்; அதிர்ந்தது கோட்டை



கொழும்பு, பெப். 15
தமது பணிப்புறக்கணிப்புத் தொடரும் என்று அறிவித்துள்ள சுகாதார தொழிற்சங்கங்கள், கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் நேற்று மாபெரும் 15

## ஊடகவியலாளரின் வீட்டின் மீது வெள்ளைவானில் வந்தோர் சூடு

விசாரணையை துரிதப்படுத்த ஊடகத்துறை அமைச்சர் பணிப்பு

கொழும்பு, பெப். 15
ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் வீட்டின் மீது நேற்றுக் காலை இனந்தெரியாத குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் 02

## போராட்டக்காரர்களை பிடித்துச் சிறையிடுக!

அமைச்சர் ஆவேசம்

கொழும்பு, பெப். 15
நீதிமன்ற உத்தரவை மதிக்காமல் தொடர்ந்து தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார். 16

திருக்கேதீச்சரத்தில் கத்தோலிக்க சொரூபம்

## அகில இலங்கை இந்துமாமன்றம் ஜனாதிபதி, பிரதமருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், பெப். 15
சரித்திரப் பிரசித்தி பெற்ற திருக்கேதீச்சர ஆலய கிழக்குத்தெரு வீதியில் அவசரமாக கிறிஸ்தவ வழிபாட்டுச் சின்னம் நிறுவப்பட்டுள்ளமை தொடர்பில் அவதானம் செலுத்தி உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி, பிரதமர், வடக்கு 15

## சர்வதேசமே! தருக நேசமே!!

ஜெனிவாவுக்காக குழைகிறார் பீரிஸ்



கொழும்பு, பெப். 15
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களால் நல்லிணக்கம் ஏற்படாது. இலங்கை வெளிப்படைத் தன்மை 16

இறக்குமதி ரயில் பெட்டிகளை

## திருத்துக; பணியில் இணைக்குக

ஜனாதிபதி கண்டிப்பான கட்டளை

கொழும்பு, பெப். 15
நல்லாட்சி அரசின் ஆட்சிக் காலத்தின்போது கொள்வனவுக்கான கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் இறக்குமதி செய்யப்பட்ட ரயில் பெட்டிகளின் தொழில்நுட்பக் கோளாறு 15

## சிவில் செயற்பாட்டாளர் சி.ஐ.டி.யால் கைது

கொழும்பு, பெப். 15
சிவில் செயற்பாட்டாளர் ஷெஹான் மாலக கமகே, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் 15

## ஊரைக் கொளுத்தும் ராசாவுக்கு கொள்ளி கொடுக்கும் டக்ளஸ்

சாடுகிறார் சிவாஜிலிங்கம்

யாழ்ப்பாணம், பெப். 15
ஊரைக் கொளுத்தும் ராசாவுக்குக் கொள்ளிக் கட்டை கொடுக்கும் மந்திரி போல இங்கு ஒரு அமைச்சர் இருக்கின்றார் - அவர்தான் டக்ளஸ் தேவானந்தா. என்ன செய்ய வேண்டு 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரிகள், அரசியல்வாதிகள் ஒத்துழைப்புடன் மணல் அகழ்வு

## சுற்றாடலை பாதுகாப்போம் அமைப்பு குற்றச்சாட்டு



**மன்னார், பெப். 15**

**மன்னாரில் அரச அதிகாரிகள் மற்றும் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தியே அவுஸ்திரேலிய நிறுவனத்தால் கனிய மணல் அகழ்வு இடம்பெறுகிறது என 'மன்னார் சுற்றாடலை பாதுகாப்போம்' எனும் அமைப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

மன்னார் பிரிஜின் லங்கா நிறுவன அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

அந்த அமைப்பினர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னாரில் கிட்டத்தட்ட 5 வருடங்களுக்கு மேலாக கனிய மணல் அகழ்வுகள் மிகவும் இரகசியமான முறையில் அவுஸ்திரேலிய நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கனிய மணல் அகழ்வால் மன்னார் தீவுப்பகுதி குறுகிய காலத்தில் முற்றுமுழுதாக கடலில் மூழ்கும் நிலை ஏற்படும். எங்களால் இயன்றவரை இது தொடர்பில் அரச அதிகாரிகளுக்கும் ஜனாதிபதிக்கும் எமது ஆதங்கத்தை தெரியப்படுத்தியும் அவுஸ்திரேலிய நிறுவனம் இதை அகழ் செய்வதில் தொடர்ந்தும் முனைப்புக்காட்டி வருகிறது.

இந்த அகழ்வுக்கு புவிச்சரிதவியல் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. மன்னார் மாவட்டத்தில் இருக்கின்ற அரச உயர் அதிகாரிகள் இது தொடர்பில் எதுவும் தெரியாது என்று கைவிரிக்கின்றனர். உயர் அதிகாரிகளையும், அரசியல் செல்வாக்குள்ளவர்களையும் கருவிகளாக பாவித்தே குறித்த நிறுவனம் இந்த உரிமங்களைப் பெற்று, கனிய மணல் அகழ்வைத் தொடர்ந்துள்ளது என நாம் அறிகின்றோம் -என்றனர்.

(வ-213)

# மோ.சைக்கிள் - ஓட்டோ மோதி இருவர் காயம்

யாழ்ப்பாணம், பெப். 15

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தன்கேணியில் நேற்றுமுன்தினம் மோட்டார் சைக்கிளும் முச்சக்கரவண்டியும் மோதி இருவர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதியும் முச்சக்கரவண்டி சாரதியும் சங்கானை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-ரி1,27)

# யாழ்ப்பாணத்தில் விபத்து இருவருக்கு படுகாயம்!

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ்ப்பாணம், ஆறுகால்மடப்பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கார் ஒன்று திடீரென வளைந்து திரும்பி மானிப்பாய் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளை மோதித்தள்ளி எதிர்த்திசையிலிருந்த மின்கம்பத்துடன் மோதியுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவருக்கு கால்முறிந்துள்ளது. அவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஆவார்.

அதேவேளை காரின் சாரதியும் காயமடைந்தார். இருவரும் உடனடியாக நோயாளர் காவு வண்டி மூலம் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். வாகனங்கள் இரண்டும் கடுமையான சேதத்துக்குள்ளாகியுள்ளன. மேலும் கார் மோதி முறிந்த நிலையில் காணப்பட்ட மின்கம்பத்தை சீர் செய்யும் நடவடிக்கையை மின்சார சபையினர் விரைந்து முன்னெடுத்தனர்.

(வ-125)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 15

ஊர்காவற்றுறை - வேலணைச் சந்தியில் கஞ்சாவுடன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், அவர்களுடன் ஊர்காவற்றுறைப் பொலிஸாரும் இணைந்து சந்தேகநபரைக் கைது செய்தனர். அவரிடமிருந்து 50 கிராம் எடையுடைய கேரளக் கஞ்சாப் பொதியொன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

(ம-4-27,125)



# யாழ்.பல்கலையில் ஆய்வுகூடம் திறப்பு

யாழ்ப்பாணம், பெப். 15

'எஹெட்' திட்டத்தின் கீழ், யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவப் பீடத்தின் மனிதவள முகாமைத்துவத்துறையில் அமைக்கப்பட்ட ஆங்கில மொழி ஆய்வுகூடம் மற்றும் திறன் விரிவுரை மண்டபம் ஆகியன நேற்றுத் திறக்கப்பட்டன.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு, ஆங்கில மொழி ஆய்வு கூடத்தையும், திறன் விரிவுரை மண்டபத்தையும் திறந்துவைத்தார்.

நிகழ்வில் திட்டத்தின் பணிப்பாளர் கலாநிதி ஈ.வை.ஏ.சார்ள்ஸ், சிரேஷ்ட நிர்வாக அலுவலர் கே.கனகரட்ணம், வணிக முகாமைத்துவப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பா.நிமலதாஸன், மனித வள முகாமைத்துவத் துறைத் தலைவர் கலாநிதி திருமதி ரி.ரவீந்திரன், செயற்றிட்ட இணைப்பாளர் கலாநிதி ஆ.சரவணபவன், செயற்பாட்டு இணைப்பாளர்களான பேராசிரியர் என். கெங்காதரன், கலாநிதி ஜே. றொபின்ஸன், ஆங்கில மொழி கற்பித்தல் துறைத்தலைவர் கலாநிதி எஸ்.சண்முகநாதன் மற்றும் விரிவுரையாளர்கள், பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ம-4-27)

# 31,600 மெ.தொன் நெல் இதுவரை கொள்முதல்!

கொழும்பு, பெப். 15

தற்போது முன்னெடுக்கப்படும் அறுவடைக் காலத்தில் இதுவரை 31 ஆயிரத்து 600 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என நெல் சந்தைப் படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, அநுராதபுரம் உள்ளிட்ட பல பிரதேசங்களிலிருந்து இவ்வாறு நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என சபையின் தலைவரான நீல் டி அல்விஸ் தெரிவித்தார்.

இதன்படி, ஒரு கிலோகிராம் நாட்டு நெல் 90 ரூபாவுக்கும், சம்பா நெல் ஒரு கிலோகிராம் 92 ரூபாவுக்கும், கீரிச் சம்பா 95 ரூபாவுக்கும் கொள்முதல் செய்யப்படுகிறது.

நெல் சந்தைப்படுத்தல் சபையின் கிளைகளுக்கு நெல் கொண்டு வரப்பட்டால் ஒரு கிலோகிராமுக்கு 2 ரூபா மேலதிகமாக வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(வ-இ)

## இளையோர்...

கொடிகாமம் மத்தி கொடிகாமத்தைச் சேர்ந்த வ. அஜய் (வயது-11) என்ற மாணவன், நல்லூரில் உறவினர்கள் வீட்டில் தங்கியிருந்தபோது டெங்கு நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளான்.

மேலும் அல்லைப்பிட்டி 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 18 வயது பெண்ணொருவரும் டெங்குத் தாக்கத்தால் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்ததாவது:-

இந்த ஆண்டு பிறந்து இரு மாதங்கள் கழிவதற்கிடையில், டெங்கால் இரண்டு உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. கடந்த வருடத்தில் டெங்கால் எந்த ஒரு இறப்பும் பதிவாகவில்லை.

கடந்த ஆண்டு பருவகால மழை வீழ்ச்சிக்குப் பின்னர் நவம்பர் மாதத்திலே 32 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். டிசெம்பரில 154 பேர் அடையாளம் காணப்பட்டனர். கடந்த ஜனவரி மாதம் 269பேரும், இந்த மாதத்தின் முதல் 13 நாள்களுக்குள்ளேயே 91 பேரும் டெங்குடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் மழை வீழ்ச்சி தற்போதும் இடையிடையே கிடைத்து வருகின்றது. தற்போது நுளம்பின் செறிவு யாழ்ப்பாணத்தில் அதிகமாகவுள்ளது. பொது மக்கள் ஒத்துழைத்தாலே இதனைக் கட்டுப்படுத்த முடியும். நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை உங்கள் வீடுகள் மற்றும் வேலைத்தளங்களில் இல்லாமற் செய்யவேண்டும். சிரமதான அடிப்படையில் பொது இடங்களைத் துப்புரவு செய்யவேண்டும்.

தொடர்ந்தும் மழை வீழ்ச்சி பதிவாகி வருவதால் எதிர்வரும் மாதங்களிலும் டெங்கு நோயின் தாக்கம் அதிகமாக இருக்கும். அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பதன் ஊடாக இதனைக் கட்டுப்படுத்தவேண்டும் - என்றார்.

(அ-ஒ-125)

## ஊடகவியலாளரின்...

தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கு ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும அறிவுறுத்தியுள்ளார்.

பிலியந்தலை கேம்பிரிட்ஜ் கோர்ட் வீட்டுத் தொகுதிக்கு நேற்று அதிகாலை 2.10 மணியளவில், வெள்ளை வானில் வந்து இறங்கிய நான்கு பேர் கொண்ட குழுவால் ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்கிரமவின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் வீட்டின் மீது கற்கள் மற்றும் கழிவுகள் அடங்கிய பொதிகளை வீசி தாக்கியதாக சமுதித்த சமரவிக்கிரம தெரிவித்துள்ளார். அத்துடன் பல தடவைகள் துப்பாக்கிச் சத்தங்களும் கேட்டதாக அவர் கூறினார்.

கல்கிசை பொலிஸ் நிலையத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் நேரடி கண்காணிப்பின் கீழ் 3 பொலிஸ் குழுக்கள் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

(ஒ-இ)

(தொடர்புடைய செய்தி பக்:3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலுற்பத்தியை அதிகரிக்க வடக்கில் துரித நடவடிக்கை

## ஆளுநர் ஜீவன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், பெப். 15**

**வடமாகாணத்தில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்காக 34 கால்நடை மருத்துவ அதிகாரி பணிமனைகளை உள்ளடக்கி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தில் உள்ள கால்நடை அலுவலகங்களுக்கு மத்திய அரசால் சுமார் 90 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் பால் உற்பத்தியில் வடக்கு மாகாணம் காத்திரமான இடத்தை வகிக்கின்ற நிலையில் அதனை மேலும் விருத்தி செய்யும் நோக்குடனேயே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள 34 கால்நடை மருத்துவ அதிகாரி பணிமனைகளை உள்ளடக்கி குறித்த திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இதற்காக 3.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்படவுள்ளது. அத்துடன் வடக்கில் சதொச விற்பனை நிலையத்தின் செயற்பாடுகளை அதிகரிப்பதற்காக கலந்துரையாடல்களும் இடம்பெற்று வருகின்றன -என்றார். (ம-ரி1.20)

# 41 மீனவர்களையும் உடன் விடுவிக்குக!

## ஸ்டாலின் மீண்டும் மோடிக்கு கடிதம்

சென்னை, பெப். 15

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 41 தமிழக மீனவர்களையும் உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

மீனவர்களைக் கைது செய்வது, தமிழக மக்களுக்கு ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தைச் சேர்ந்த 41 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களது 6 படகுகளும் இலங்கைக் கடற்படையினர் வசம் உள்ளன.

மத்திய மற்றும் மாநில அரசுகளின் கூட்டு முயற்சிகளின் வாயிலாக, நீண்டகாலமாகத் தொடர்ந்துவரும் இந்த எரிச்சலூட்டும் சிக்கலுக்கு நிலையான தீர்வைக் காண வேண்டியது மிகவும் இன்றியமையாதது.

இரு தரப்புப் பேச்சை நடத்துவதற்கான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ம-4,இ)

# தொழிற்பயிற்சியுடன் வேலைவாய்ப்பு

கொழும்பு, பெப். 15

2020ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தகுதிபெறாத மாணவர்களை தொழிற்பயிற்சிக்கு உட்படுத்தி, அவர்களுக்கான வேலைவாய்ப்பை வழங்கும் நடைமுறை, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தால் திட்டமிடப்பட்டுள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய 2020ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் சுமார் 98 ஆயிரம் மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தகுதி பெறவில்லை. இவர்களுள், கணித பாடத்தில் சித்தியடையாது உயர்தரக் கற்கைநெறியைக் கற்றுக்கொண்டு அடுத்த ஆண்டில் கணித பாடத்துக்குப் பெறுபேற்றைப் பெற்றுத் தருவதாகக் கூறி க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களைத் தவிர ஏனைய மாணவர்கள் அனைவரும் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-ரி1)

# ஆசிரியர் போராட்டம் பற்றி அறிக்கைகள் விடுவது தவறு

## இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 15

சில சுகாதாரத்துறை தொழிற்சங்கத் தலைவர்கள் தமது வேலைநிறுத்தத்தின்போது ஆசிரியர் சங்கங்கள் தொடர்பில் வெளியிட்ட அறிக்கைகளைக் கண்டிக்கின்றோம் என்று இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆசிரியர்களின் போராட்டம் தொடர்பில் அவர்கள் கொண்டுள்ள புரிதலை இவ்வாறான அறிக்கைகள் காட்டுகின்றன என்று ஒன்றியத்தின் பிரதம செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசியல்வாதிகள் தீர்வுகளை வழங்க முடியாவிட்டால், எந்தவோர் ஊழியருக்கும் அல்லது தொழிற்சங்கத்துக்கும் நீதிக்காக போராட உரிமை உண்டு. 120 நாள்களுக்கு தொழிற்சங்க வேலைநிறுத்தம் நடத்துவது எளிதல்ல.

ஆசிரியர் போராட்டம் குறித்து மற்ற தொழிற்சங்கங்கள் அறிக்கை வெளியிடுவது நல்ல அறிகுறி அல்ல- என்றார். (எ-இ)

# ஊடகர் சமுத்தவின் வீட்டுக்கு துப்பாக்கிமுனை அச்சுறுத்தல்

கொழும்பு, பெப்.15

ஊடகவியலாளர் சமுத்த சமரவிக்ரம வீட்டின் மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது.

முகக்கவசம் அணிந்து, ஆயுதங்களுடன் வந்த இனந்தெரியாதவர்கள் வீட்டின்மீது கற்களை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டின் பாதுகாவலரைத் துப்பாக்கிமுனையில் அச்சுறுத்தி வைத்திருந்தவாறு, தாக்குதல்தாரிகள் வீட்டின்மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-இ)




**ப**ட்சி சும்மா இருந்தாலும் சொர்ணாக்கா ஏதும் செய்து கதைக்க வைச்சுக்கொண்டே இருக்கிறா. சொர்ணாக்காவைத் தெரியும் தானே. யாழ்ப்பாணம் கச்சேரியைக் கதிகலங்க வைக்கிறதில சொர்ணாக்காவை அடிச்சுக்கொள்ள ஆளே கிடையாது. பைலுக்குள்ள கிடக்கிற டொக்கிமெண்ட்ஸைக் கிழிச்செடுக்கிறது. ட்ரவலிங் அலவன்ஸ் எப்பிடியெல்லாம் கள்ளவழியில எடுக்கலாம் எண்டு பிளான் பண்ணி செய்யிறது. கலியாணம் கட்டுற இளம்பிள்ளையளுக்கு லீவு தரமாட்டன் எண்டு றாங்கி காட்டுறது சொர்ணாக்கா செய்யிற அலப்பறையள் கொஞ்சநஞ்சமில்லைக் கண்டியளோ.

இந்த சொர்ணாக்கான்ர இன்னொரு முகம் கிட்டடியில பப்ளிக் ஆகிட்டுது. 'நீதிக்கான அணுகல்' எண்ட நடமாடும் சேவை நடந்ததெல்லோ. அதுக்கு நீதியமைச்சர், வெளிவிவகார அமைச்சர் , அவையின்ர பரிவாரங்கள் எண்டு வந்தவைக்கு பலகாரங்கள் குடுத்து உபசரிச்சவை. ஆனால் அப்பிடிக் குடுத்த பலகாரங்கள் தட்டுகளோட கொஞ்சம் காணாமல் போட்டுது. அப்பிடி ஆரிந்தப் பலகார விழுங்கி ? எண்டு கண்டுபிடிக்க, இன்னும் கொஞ்சப் பலகாரங்களை அங்க வைச்சிட்டு, அங்காலிப் பக்கமா சில அதிகாரியள் ஒளிச்சிருந்திருக்கினம்.

படபடவெண்டு வந்த சொர்ணாக்கா, அங்காலையும், இஞ்சாலையும் பார்த்திட்டு பலகாரங்களை தன்ர ஹாண்ட்பாக்குக்குள்ள போட்டுக்கொண்டு ஒண்டுமே நடக்காத மாதிரி போட்டாவாம். ஒரு பலகாரத்தை கூட விட்டு வைக்காமல் சொர்ணாக்கா காட்டுற இந்த வித்தை இதுக்கு முதலும் கனதரம் நடந்திருக்காம்.

ஒருக்கா அலுவலக வேலையொண்டுக்காக சொர்ணாக்கா தாய்லாந்து போயிருக்கிறா. அங்க ஒரு சுப்பர் மாக்கெற்றில ஹாண்ட்பாக் ஒண்டை அவா நைசா எடுத்துக் கொண்டுவரவெளிக்கிட்டு, பிறகு அது பிடிபட்டு ஒரே அசிங்கமாப் போச்சு சொர்ணாக்காவுக்கு. பிறகொருக்கா, கொழும்பில அமைச்சு அலுவலகம் ஒண்டில கூட்டமொண்டுக்கு போயிருக்கிறா. கூட்டம் முடிய எல்லாருக்கும் ஹொட்டல் சாப்பாடு. ஒருபாட்டம் சாப்பிட்டு முடிச்சிட்டு, 'என்ர றைவர் வெளியில நிக்கிறார். அவருக்கு ஒரு பார்சல் தர முடியுமா?' எண்டு வெக்கத்தைவிட்டுக் கேட்டிருக்கிறா. அங்க இருந்த மற்றவையும்' மனுசி, தன்னை மாதிரியே ஒரு சாதாரண றைவரிலையும் அக்கறை எடுக்கிறாவே' எண்டு மதிப்பா பாத்தினமாம். ஆனால் கடைசி வரைக்கும் அந்தக் ஹொட்டல் சாப்பாட்டுப் பார்சல் வெளியில நிண்ட றைவருக்கு கிடைக்கவேயில்லையாம். சொர்ணாக்கா தன்ர வீட்ட கொண்டு போகத்தான் அப்பிடி றைவருக்கு ஒரு பார்சல் எண்டு எழுப்பம் காட்டியிருக்கிறா. என்னதான் பதவி, பணம் இருந்தாலும் சிலருக்கு இப்பிடி சில்லறைப்புத்தி இருக்கிறதை மாத்தேலாது போல.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலை திறப்பு விழா

யாழ்ப்பாணம்,
பெப். 15

காங்கேசன்துறை மக்கள் கழக அமைப்பினரால் அமைக்கப்பட்ட கலாநிதி நடிகமணி வி.வி.வைரமுத்துவின் சிலை திறப்பு விழா, நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு காங்கேசன்துறையில் இடம்பெறவுள்ளது. விழாவில், பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினர்களாக வலி. வடக்கு பிரதேச செயலர் ச.சிவஶ்ரீ, நடேஸ்வராக் கல்லூரி அதிபர் கு.விமலன், நடேஸ்வராக் கனிஸ்ர வித்தியாலய அதிபர் வசந்தராணி சுதர்சன், கௌரவ விருந்தினராக வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ம-ரி1)

## OBITUARY

Born 27th May, 1951



Called to rest 11th February, 2022

### Mrs. Kirupamalar David Retnanathan


(Retired Teacher of Nuffield School, Kaithady)

She entered into glory peacefully. She had been associating with people on earth kindly and whole heartedly. Thus, she won the hearts of many. Beloved daughter of the late Mr. and the late Mrs. V.N.Aiyathurai of Church Road, Chavakachcheri. Daughter-in-law of the late Mr. and the late Mrs. Vairavanathan. Wife of Dr. Vairavanathan David Retnanathan towards whom she showed feeling of liking, loving very much and caring. Sister of Mrs.Jothimalar - Mahendran (Australia), the late Dr. Jothidas- Jeba (Australia), Mr. Kirupaidasan - Mythili (Australia), Mr. Gnanathasan - Ariaranee (Sri Lanka) and Ms. Thangamalar (Australia). Sister-in-law of Mr.Ratnaraja- Thaya ( Sri Lanka), the late Mr. Stephens - Regina (Sri Lanka), Mr.Ratnaseyan (Sri Lanka), the late Mr. Ratnaruban - Rani ( Sri Lanka) and Mr. Ratnaventhan – Jeyanthi (UK). Aunt of Sakunthala, Vimalendran, Samuel, Nathaniel, Dr.Arunn, Avanthi, Ana, Leoine, Christable and Priyanka. Beloved grandmother of Keziah, Anaya and Aalya. Remains will lie at the Jeyaratna Funeral Parlour, Borella on Wednesday, 16th February, 2022. Time for viewing 10.30 am - 3.00 pm. Private family funeral service will be held at 3.30 pm. Thereafter cremation at 5.00 pm at the crematorium, General Cemetery, Borella.

No. 12 1/2, Charles Place, Dehiwela.

Informant: Dr. V. David Retnanathan 074- 2369974

## மரண அறிவித்தல்



### பசுபதி தம்பிப்பிள்ளை

நெடுந்தீவு கிழக்கினைப் பிறப்பிடமாகவும் ஸ்கந்தபுரம் இலக்கம் 111 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் பசுபதி தம்பிப்பிள்ளை நேற்று (14.02.2022) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதி சின்னம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, பராசக்தி, சேதுபதி, பாலராசா (உருத்திரபுரம்), அபிராமி, (உருத்திரபுரம்), மலர் (ஆனந்தபுரம்) ஆகியோரின் அன்பு சகோதரனும், உதயமூர்த்தியின் (ஸ்கந்தபுரம் இல-2 அ.த.க பாடசாலையின் ஆசிரியர்), அன்புத் தந்தையும், புஸ்பலதாவின் (கோணவில் மகா வித்தியாலய ஆசிரியர்) அன்பு மாமனாரும், நர்த்தனாவின் அன்பு பேரனும், காலஞ்சென்றவர்களான தம்பையா, திருநாவுக்கரசு, பார்வதி, தவமணி (சிவநகர்), சின்னத்துரை, தர்மலிங்கம் (ஆனந்தபுரம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.02.2022) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று முற்பகல் 10.00 மணியளவில் ஸ்கந்தபுரம் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 7275) 1/6

## மரண அறிவித்தல்



தோற்றம் 01.07.1952 — மறைவு 14.02.2022

### கந்தையா சிவபாதம்

அம்மன் கோவிலடி குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவபாதம் நேற்று (14.02.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், சொர்ணம்மா கெங்கையம்மா, சறோயினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை, சண்முகநாதன், செல்லத்துரை மற்றும் புஸ்பமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02. 2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடா கடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அம்மன் கோவிலடி,
குரும்பசிட்டி கிழக்கு,
தெல்லிப்பளை.

தகவல்:
குடும்பத்தினர்
077 6708 577

(CS 18570) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மீண்டும் திரும்பும் இருண்டயுகம்!

இலங்கை மீண்டும் இருண்ட யுகத்தை நோக்கிச் செல்வதற்கான சமிக்ஞைகள் தென்படத் தொடங்கியுள்ளன. அடக்குமுறைக்குப் பெயர்போன ராஜபக்ச ஆட்சி, மீண்டும் தன் வேலையைக் காட்ட ஆரம்பித்திருக்கின்றது.

ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்கிரமவின் பிலியந்தலையில் உள்ள வீட்டுக்கு துப்பாக்கியுடன் வந்தவர்கள் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றிருக்கிறார்கள். வெள்ளைநிற வான் ஒன்றில் வந்தவர்களே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கின்றனர் என்பது பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்திருக்கின்றது.

ராஜபக்சக்களின் முன்னைய ஆட்சிக்காலத்தில் வெள்ளைவான் கடத்தல்களும், காணாமல் ஆக்கப்படுதல்களும் மலிந்திருந்தன. ஊடகங்கள் மீதான தாக்குதல்களுக்கும் குறைவிருக்கவில்லை. உண்மைகளை வெளிக்கொணர்ந்த – வெளிக்கொணர முயன்ற – ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர், காணாமல் ஆக்கப்பட்டனர். ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டன.

2016 நவம்பர் 19ஆம் திகதி அப்போது சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சராகவிருந்த சாகல ரத்நாயக்க நாடாளுமன்றத்தில் முன்வைத்த புள்ளிவிவரங்களின்படி, 2006 ஜனவரி முதல் 2015 ஜனவரி வரை 13 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருந்தனர். 87 ஊடகவியலாளர்கள் தாக்குதல்களுக்கு உள்ளாகியிருந்தனர். 20 ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். 5 ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டிருந்தன.

ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள் வெளியிட்ட தகவலின்படி 2004 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் 44 ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியுடன் தொடர்புடையவர்கள் கொல்லப்பட்டிருந்தனர். ஒன்பது ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டிருந்தன. ‘உதயன்’ பத்திரிகை நிறுவனமும் தாக்கப்பட்டிருந்ததுடன், அதன்பணியாளர்களும் கொல்லப்பட்டிருந்தனர்.


ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னர் தணிந்திருந்த இந்தக் கொடூரங்கள் மீண்டும் இப்போது அரங்கேற ஆரம்பித்திருக்கின்றன. கருத்துச் சுதந்திரத்தை முற்றாக மறுதலிக்கும் ராஜபக்ச அரசாங்கம், தங்களுக்கு எதிராகக் கருத்து வெளியிடுவோரை, உண்மைகளை வெளிக்கொணரும் ஊடகவியலாளர்களை, ஊடக நிறுவனங்களைச் சட்டத்தைக் கொண்டு அடக்கும் கைங்கரியத்தை ஏற்கனவே ஆரம்பித்திருந்தது. இப்போது வெள்ளைவாகனத்தில் சென்று ஊடகவியலாளரின் வீட்டுக்குள் தாக்குதலை நடத்திய சம்பவம், இலங்கையில் மீண்டும் இருண்ட யுகம் திரும்புகின்றதா என்ற அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாகக் கருதப்படும் ஊடகத்துறை இலங்கையில் பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டிருக்கின்றது. மனித உரிமைகள், கருத்துரிமைகள் தொடர்பாக வாய்கிழியப் பேசும் ஆட்சியாளர்கள், அதை நடைமுறையில் கிஞ்சித்தும் கடைப்பிடிப்பதாக இல்லை. கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் மீதும், ஊடக நிறுவனங்கள் மீதும் நடத்தப்பட்ட கொடூரமான தாக்குதல்களுக்கோ படுகொலைகளுக்கோ கூட இன்னமும் நீதி கிடைத்தபாடாயில்லை. அப்படியிருக்கையில், தற்போது நடந்த தாக்குதல் சம்பவத்துக்கு மட்டும் நீதி கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது.

தாக்குதல்கள், கடத்தல்கள், உயிர்க்கொலைகள் மூலம் உண்மைகளை மறைத்துவிட முடியாது. அந்த உண்மைகளின் வெப்பம் ஒருநாள் கொடுங்கோல் ஆட்சியைச் சுட்டெரிக்கவும் கூடும்.

நாளொரு நல்வார்த்தை

“ஒவ்வொரு நாளுமே இந்த ஆண்டின் மிகச்சிறந்த நாள்தான் என்று உங்கள் இதயத்தில் எழுதுங்கள்”.
-ரால்ப் வால்டோ எமர்சன்



# மீனவர்களின் விவகாரத்துக்கு இராஜதந்திர நகர்வு அவசியம்

## சம்மேளனத் தலைவர் வலியுறுத்து

**கொழும்பு, பெப். 15**

**கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளைச் சரியாக ஆராய்ந்து அதனை இராஜதந்திர ரீதியில் நகர்த்தவேண்டிய தேவையுள்ளது என்று யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்.**

வடக்கில் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் 4 மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர் பிரதிநிதிகளுக்கிடையில் விசேட கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.



அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை - இந்திய கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு புத்திஜீவிகள், சிவில் சமூகங்களின் ஒத்துழைப்பு தேவை. எதிர்காலத்தில் வடக்கு கடற்றொழிலாளர்கள் ஒற்றுமையாக ஒரே குடையின் கீழ் செயற்படுவதற்கு. 4 மாவட்டங்களிலும் இருக்கின்ற கூட்டுறவுச் சமாசங்கள் ஒன்றிணைந்து செயற்படுவதுதான் எங்களுடைய நோக்கமாகக் காணப்படுகின்றது.

கடற்றொழிலாளர்களிடையே பிளவை ஏற்படுத்தாது. எமது ஒற்றுமையை வலுப்படுத்தி நாம் ஒற்றுமையாக தீர்வை நோக்கி நகர்வதற்கு அரசியல் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டும். கட்சி பேதமின்றி கடற்றொழிலாளர்களுக்குள்ள பிரச்சினைகளை ஆக்கபூர்வமாக ஒரே குடையின்கீழ் கையாள வேண்டும்.

எதிர்காலத்தில் கடற்றொழிலாளர்கள் வீதிகளில் இறங்கிப் போராடாமல் இருப்பதற்கு 4 மாவட்டங்களைச் சேர்ந்த அனைத்து சிவில் சமூகங்கள், புத்திஜீவிகளின் ஒத்துழைப்பு அவசியம் - என்றார்.

(ம-4-20)

# இராமேஸ்வரம் மீனவர்கள் மங்களூருக்கு இடமாற்றம்

இராமேஸ்வரம், பெப். 15

இராமேஸ்வரத்திலுள்ள அதிகமான மீனவர்கள் தங்கள் பகுதியை விட்டு, கடற்றொழிலுக்காக இந்தியாவின் வேறு மாநிலங்களுக்குச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இராமேஸ்வரத்திலுள்ள மீன்பிடித்துறை முகத்தில் சுமார் 400க்கும் மேற்பட்ட இந்திய இழுவைப்படகுகள் மீன்பிடிக்காக அனுமதி பெற்றுள்ளன. இந்த நிலையில் கடந்த வாரம் தமிழக மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டதுடன், கைதும் செய்யப்பட்டனர். இதனால் இராமேஸ்வரத்திலுள்ள அதிகமான மீனவர்கள் தங்கள் பகுதியை விட்டு தொழிலுக்காக இந்தியாவின் வேறு மாநிலமான மங்களூர் பகுதிக்குச் சென்றுள்ளனர் என்று தமிழக மீனவ அமைப்புகள் தெரிவித்துள்ளன. (ம-4,60)

நாளை
16.02.2022
புதன்கிழமை
மாசி 04
சுபநேரம் : 05.03 - 06.33
ராகுகாலம் : 12.33 - 02.03
பூரணைவிரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராண வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி துன்னாலையம்பதி

# வல்லிபுரம் ஸ்ரீ சக்கராழ்வார் தேவஸ்தானம்



## தேர்த்திருவிழாச் சிறப்பு மலர் - 15.02.2022

### ஆலய வரலாறு

எங்கும் நிறைந்த இறைவனை சிறப்பாக ஓர் இடத்தில் இருத்தி சிந்தையைப் புனிதமாக்கி சீரோடு வாழ்வதற்கு எழுந்தவையே ஆலயங்கள். ஈழமணித் திருநாட்டின் சிரம் என விளங்கும் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலே வடபால் அமைந்த பதி வடமராட்சி. இப்பதியில் பருத்தித்துறைப் பிரதேசத்தில் அமைந்துள்ள புகழ்பூத்த பழமையும் பெற்ற ஆலயம் வல்லிபுர ஆழ்வார் ஆலயம். இவ் ஆலயமானது துன்னாலை. புலோலி வராத்துப்பளை. கற்கோ வளம் ஆகிய கிராமங்களுக்கு அணி சேர்க்கும் முகமாக இக்கிராமங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள வல்லிபுரத்தில் அமைந்துள்ளது.

ஆர்ப்பரிக்கும் கடல். வெள்ளை மணற்பரப்பு. பசுமை கொடுக்கும் விருட் சங்கள் என்று இயற்கை அன்னை அரவணைக்கும் இடத்தில் மிளிர்வது சிறப்புக்குரிய தாகும். இத்தலம் மூர்த்தி. தலம். தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கமையப் பெற்ற ஒன்றாக மிளிர்வது சிறப்புக்குரிய அம்சமாகும்.

வல்லிபுரம் என்ற பெயருக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் கி.பி. 303 இல் நாகர்களுடைய ஆட்சியும் கி.பி. 556 இல் லம்பகர்ணர் ஆட்சியும் நிறைவுக்கு வந்தாக வரலாற்று ஆசிரியர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இப்பகுதிகளில் குடியேறிய படைவீரர்களின் ஆதிக்கம் வளர்ச்சியடையத் தொடங்கிய போது வடமறவர் ஆட்சி செய்த இடமாக வடமராட்சி விளங்கியது. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை கருத்துப்படி தொண்டை நாட வடக்கில் வசித்த மக்களில் ஒரு பகுதியினர் இங்கு குடியேறியதாகவும். அவர்கள் குடியே பிரதேசத்துக்கு வடமராட்சி எனப் பெயரிட்டதாகவும். தெரிய வருகின்றது. இக்குழுவி தலைவனாக வல்லிய தேவன் என்பவன் இருந்த தாகவும். எனவே அவன் பெயன குறிக்கும் முகமாக இக் கிராமத்துக்கு வல்லி புரம் என்று பெயரிட்டதாகவும் கூறப்படுகின்றது இங்கு கடவுள் பக்தியும். செல்வப் பெருக்கும் நிரம்பப் பெற்ற குடும்பத்தில் இலவல்லி பிறந்த அவள் திருமணமாகி குழந்தைப் பேறின்றித் திருமாலை வழிபட்டுவந்தாள். இக் காலத் விஷ்ணு வங்கக்கடலில் மீனவர்க்கு பெரும் தொல்லை கொடுத்துவந்தார். இவ்வேள இயற்கையை இரசிக்க விரும்பிய இலவல்லி கற்கோவளத்தை அடைந்து கட விளையாடினாள். பின்னர் படகில் ஏறி சிறித தூரம் சென்றாள். அவ்வேளை மீன் ஒன்று அ மடியில் பாய்ந்தது. அம்மீன் மடியில் அழகிய குழந்தையாகி சாங்கு. சக்கரம் முதலிய வற் கொண்டதாகவும் காட்சி அளித்தது. இல வல்லியையும் தன் பூர்வீக பலனை எய்திய எண்ணி மகிழ்வடைந்தாள். இறுதியில் அம்மீன் சக்கர வடிவத்தை அவளுக்கு அளித்துவி மறைந்தது.

இலவல்லி மச்சமாய். மகவுமாய் காட்சியளித்த மாயவனால் அருளப் பட்ட சக்கரத் வல்லிபுரத்துக்குக்கொண்டு வந்து ஆலயம் அமைத்து வழிபட்டு வந்தாள். இலவல்லியி ஆழ்ந்த பக்தியின் ஊடாக உருவாக்கப்பட்ட ஆலயம் அதலால் வல்லிபுர ஆழ்வார் எனப் பெ

வல்லிபுர அழ்வார் ஆலய தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்



Since 1978

நடராசா கஜந்தன்

நியூமைதிலி ஜுவலர்ஸ்

ஸ்தாபனத்தின் மற்றுமொரு கிளை ஸ்தாபனமாக

நடராசா கஜந்தன்

சந்தோஷ் ஜுவல்லர்ஸ்



Since 1978

சந்தோஷ் ஜுவலர்ஸ்



காலத்தை வெல்லும் கலை
நுட்பத்துடன் மின்னும் பொன்
நகையால் மேலும் உங்கள்
புன்னகை ஒளிரும் விரையுங்கள்
நியூ மைதிலி
மற்றும்
சந்தோஷ் ற்கு



இல.97A, 99V, மின்சார நிலைய வீ
யாழ்ப்பாணம் என்ற முகவரியில்
இயங்கிக் கொண்டிருக்கின்றது
என்பதனையும்
வாடிக்கையாளர்களுக்கு
அறியத் தருகின்றோம்.

ஒரிஜினல் தங்க நகைகளை பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

இல. 38, 40, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
Tel : 021 221 7878 Fax : 021 221 8777
newmaithily40@gmail.com
newmaithily Jewellers
0094 21 221 7878

இல. 97A, 99V மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாண
Tel : 021 221 1177
santhoshjewellers1188@gmail.com
santhoshjewellers
021 221 1188

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேவை

ஆண் உதவியாளர்கள் எங்கள் தென் மாகாணத்தில் உள்ள மொத்த வியாபார கடைக்கு தேவை. மாதத்திற்கு 30,000 வரை சம்பளம் வழங்கப்படும். (உணவு தங்குமிடமும் வழ்ங்கப்படும்).

**Saw & Sons**
**077 480 3379**

(CR.37581) (1-6)

## விற்பனையாளர் தேவை

யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள பழக்கடைக்கு விற்பனையாளர் தேவை. ஆட்டோ ஓடவும் தெரிந்திருத்தல் வேண்டும். 50 வயதுக்கு மேற்பட்டோர் விரும்பத்தக்கது.

தொடர்பு:
**077 520 6407**

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

### பதவி வெற்றிடம் - வாகனத் திருத்துனர் (Mechanic) - 2

ஹலோ ட்றஸ்ட் ஆனது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவியரீதியில் 28 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.

ஹலோ ட்றஸட் மேலும் இரண்டு வாகனத்திருத்துனர்களை ஏற்கனவே இருக்கும் எங்களுடைய வேலைத்தள அணியினருடன் சேர்த்துக்கொள்ள விரும்புகிறது

* தேவைப்படும் தகைமைகள்
  - இலகுரக மற்றும் பார ஊர்தி வாகனங்களைத் திருத்தக்கூடிய அனுபவம் வாய்ந்த வர்களாக இருத்தல் வேண்டும்.
  - 3 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கைச் சாரதி அனுமதிப்பத்திரத்தினைக் கொண்டிருக்க வேண்டும். இதற்கு மேலதிகமாக மின்னணுக் கட்டுப்பாட்டு அமைப்புத் தொடர்பான அறிவினைக் கொண்டிருப்பதும் ஆங்கில மொழியில் பேசும் திறனைக் கொண்டிருப்பதும் மேலதிக தகமையாகக் கருதப்படும்.

சம்பளமும் அதனுடன் தொடர்புபட்ட நன்மைகளும் அனுபவம் மற்றும் தகமைகளைப் பொறுத்து பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிபரக்கோவை மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய விபரங்கள் என்பவற்றை 22 பெப்ரவரி 2022 செவ்வாய்க்கிழமைக்கு முன்பாக கீழ் உள்ள தபால் முகவரிக்கோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கலாம்.

**மனிதவள முகாமையாளர்**
**த ஹலோ ட்ரஸ்ட்,**
**450, திருநகர் மேற்கு,**
**கிளிநொச்சி**
E-mail: hr@halosrilanka.org

(cr.37578) (2.6)

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

### VACANCY ANNOUNCEMENTS

The HALO Trust is a non-political and non-religious registered British charity, which removes land mines and other explosive remnants of war. HALO works in 28 countries and territories globally and has worked in Sri Lanka since 2002 with offices in Kilinochchi, Jaffna, and Colombo.

HALO is seeking hard working candidates for the below positions. The positions are based at our Kokkuththoduwai office. Interested candidates should submit their CV to the below address.

Applications must be submitted on or before 22nd of February 2022. Only successful candidates will be contacted. For further information on the roles advertised, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply and particularly female candidates for all roles.

**ADMINITRATIVE ASSISTSNT** -01 position
- Secondary education and two years of work experience in a similar role
- Good spoken and written English
- Good computer skills including MS Office (in particular strong command of Excel and Word)
- Manage and update all KKD staff leave and HR related matters
- Make sure all consumable items are in place and timely replaced for KKD Office and accommodation house
- Having valid driving license

**STORE ASSISTANT** - 01 position
- Secondary education and two years of work experience in a similar role
- Good communication skill in English
- Good computer skills including MS Office
- Good organizational and management skills
- Having valid driving license

**OFFICE MAID** -01 position
- KKD accommodation, Office Workshop cleaning.
- Cooking for accommodation

HR Manager
The HALO Trust 450,
Thirunagar west
Kilinochchi
E-mail to hr@halosrilanka.org

(CR.37579) (7.6)




புங்குடுதீவு மத்தி

# பெருங்காடு மூத்த நயினார் புலம் வரசித்தி விநாயகர் தேவஸ்தான புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

**15.02.2022**

**தேர்த்திருவிழா - 16.02.2022**



தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:

**ESS Jey**
**Electricals**
**09, Stanly Road,**
**Jaffna.**

**சித்திவிநாயகர்**
**ஸ்ரோர்ஸ்**
66, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றத்தின் உறுப்பினர் வைத்திய கலாநிதி திருமதி T. கௌரி அவர்களின் அன்புத் தந்தையார்

### இரத்தினம் திரவியம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(cs.42912) (2.6)

**வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றம்**

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலக தாபன கிளையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி நிராஜினி யசோதரன் அவர்களின் பாசமிகு தாயார்

### பாலகிருஷ்ணன் பத்மினிபரமேஸ்வரி

அவர்கள் கடந்த 2022.02.12 ஆந் திகதி சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நலன்புரிக்கழகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

(CR 37585)1-6

**SHANTHIHAM**
Association for Health & Counselling


## Consultant for Baseline Survey

SHANTHIHAM – Association for Health and Counselling is looking for a consultant with relevant experience and expertise to lead a team and undertake Baseline Survey for Improving Gender Equality in Northern Province of Sri Lanka project to be implemented by Shanthiham in Jaffna, Kilinochchi and Mullitievu Districts. People who are interested and possess relevant experience and qualifications please contact

hr.shanthiham@gmail

0212223338 to obtain TOR for this assignment and apply before 20th of February 2022.

## நீங்காத நினைவுகளுடன் 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 • 04 • 1947

மறைவு 08 • 03 • 2020

### அமரர் Lion வைரமுத்து சுப்பிரமணியம்

(முன்னாள் சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர், KKS.
முன்னாள் பிரதேசசபை உறுப்பினர், வலி கிழக்கு)

**திதி: 15.02.2022**

அன்பின் உருவமாய் பாசத்தின் இருப்பிடமாய்
அரவணைப்பில் சிகரமாய் என்றும் புன்னகைத்த முகத்துடன்
உற்றார் உறவினர்க்கு என்றும் உதவிக்கரம் நீட்டி
தன் குடும்பத்தினர் எல்லோரினதும் சீர் சிறப்பிற்கும் வழிகாட்டி
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
உங்கள் ஆத்மா என்றும் இறைவன் திருவடியில் இன்புற்றிருக்க
இறையருளை வேண்டி மலர்தூவி அஞ்சலிக்கின்றோம்

மகன்-
Lion (Eng) S. சுதர்ஸன்
மற்றும் குடும்பத்தினர்

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(cs.18355) (2.6)

# மரண அறிவித்தல்

## வீரவாகு நாகேஸ்வரி



தோற்றம் 14.04.1948

மறைவு 11.02.2022

யாழ்ப்பாணம் மீசாலை மேற்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி வடக்கு, மீசாலையை வதிவிடமாகவும் கொண்ட வீரவாகு நாகேஸ்வரி கடந்த (11.02.2022) வெள்ளிக்கிழமை மீசாலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை - தங்கம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற வாரித்தம்பி வீரவாகு அவர்களின் பாசமிகு மனைவியும், கனகசபை, கிருஷ்ணசாமி, குமாரசாமி, சாந்தநாயகி ஆகியோரின் சகோதரியும், விஜயசிறீலன், விமலசிறீலன், யசோதா, சுயாதனா, ஈழரதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயந்தினி, காயத்திரி, மதன், திருக்குமார், கிருபாகரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கர்ஷனா, வர்ஷனன், வர்ஷிகா, பகிஷா, கஷ்னி, ஆர்த்தி, கவின், கிருஷிகா, ரூபிகன், நிரூத்திகன், அபி, அபினாஸ், அக்ஷி ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.30 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**மகன் - 074 268 4855, + 141 657 53476 (கனடா)**
**திருக்குமார் - 077 352 4657**
**விஜயசிறீலன் 049 157 752 64184**

(cr.37575) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு 02 . 04 . 1956



உதிர்வு 13 . 02 . 2022

## திரு. ஆனந்தநடராஜா இரட்னேஸ்வரன்

யாழ்ப்பாணம் மானிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. ஆனந்தநடராஜா இரட்னேஸ்வரன் நேற்றுமுன்தினம் (13.02.2022) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆனந்தநடராஜா - புஸ்பமணி தம்பதியரின் அன்பு மகனும், ரதிதேவி, காலஞ்சென்ற ரதீஸ்வரன், ரகுலேஸ்வரன் (டென்மார்க்), இலங்கேஸ்வரன் (லண்டன்), காலஞ்சென்ற உலகேஸ்வரன், ரதிமதி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சபானாவின் (கனடா) அன்புத் தந்தையும், சிறிகரனின் மாமனாரும், கருணாநிதி, சுந்தரீஸ்வரி, முருகசோதி, அம்பிகை, சிறிகாந்தா ஆகியோரின் அன்பு மைத்துனரும், துஷ்யந்தி, ஜனார்த்தன், ரேவதி, நிமல்ராஜ், நிமல்காந்த் ஆகியோரின் அன்பு மாமனாரும், பவித்திரனின் அன்பு பெரியப்பாவும், நிரஞ்ஜனி, நிரோஜனா, சஞ்ஜீவன், பிரசன்னாத், பிரசாத் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2022) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ரஞ்சன் - சகோதரன்
077 738 7950

(cs. 18565) (2.6)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 10 . 01 . 1932



இறப்பு 16 . 01 . 2022

கடந்த 16.01.2022 அன்று சிவபதமடைந்த
எமது குடும்ப குலவிளக்கு

## அமரர் பரமசாமி இராசம்மா

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (15.02.2022) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும், வருகைதந்து இவ் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ் விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

(cs 42815) (2.6)

# 10ஆம் ஆண்டு நினைவு

மலர்வு 23 . 10 . 1952



உதிர்வு 15 . 02 . 2012

## அமரர் கந்தையா சண்முகராசா

(உரிமையாளர் - அம்பாள் ஸ்ரோர்ஸ்,
வீரமாகாளி அம்மன் கோயிலடி)

ஆண்டுகள் பத்து கடந்து சென்றாலும்
ஆறவில்லை எங்கள் மனம் குடும்பம் என்ற கோயிலில்
குலவிளக்காக திகழ்ந்த எங்கள் தெய்வமே!
மாண்டாலும், மறையாது
உங்கள் நினைவு என்றென்றும்.

34/1, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(cs. 18561) (2.6)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பலவகைகளில் வருமானம் வரும். பிறருக்கு உதவுவீர்கள். நியாய மான முறையில் சம்பாதிப்பீர்கள். பெரியோரின் ஆசி கிடைக்கும். குடும்பத்தில் உள்ள நபர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**இடபம்:** எந்தவொரு பிரச்சினையும் வந்தவேகத்தில் காணாமற்போகும். வாழ்க்கைத்துணைக்கு பதவி, சம்பள உயர்வு கிடைக்கும். சிலருக்கு அரசாங்கப் பணி கிடைக்கும். பணம் புழங்கும்.

**மிதுனம்:** கலைத்துறையில் ஈடுபாடு அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும். பணியாளர்கள் இன்று கவனமாக இருக்கவேண்டும். சுபநிகழ்ச்சி பற்றிய எண்ணங்கள் நிறைவேறும்.

**கடகம்:** வெற்றி சற்றே எட்டிப்போகும். மனம் தளர வேண்டாம். பணியாளர்களின் முயற்சி வெற்றி அளிக்கும். மகிழ்ச்சிகூடும். பயணங்கள் திட்டமிட்டபடி முடிவதில் தடை இருக்கலாம்.

**சிம்மம்:** முயற்சியும், பயிற்சியும் இருப்பவர்களுக்கு வெற்றி கிடைக்கும். வீட்டில் உள்ள மூத்தவர்களின் ஆரோக்கியத்தில் கவனமாக இருங்கள். உங்களின் தொழில் ஆர்வம் வெற்றியைத் தேடி தரும்.

**கன்னி:** பொருளாதார உயர்வு ஏற்படப் பாடுபட்டு வெல்வீர்கள். மருத்துவ ஆலோசனை எடுத்துக்கொள்வது மிகவும் நல்லது. புதிய வாகனம் வாங்குவீர்கள். பணியாளர்களுக்கு ஊதியம் அதிகரிக்கும்.

**துலாம்:** எதிர்பாராத நன்மை கிடைக்கும். சேமிப்பில் ஆர்வம்கூடும். பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது. பிள்ளைகளுக்காகச் செலவு செய்யவேண்டி வரும்.

**விருச்சிகம்:** பிரிந்த குடும் பங்களை ஒன்று சேர்த்து மகிழ்ச்சி அடைவீர்கள். சமூகத்தில் உங்களின் மதிப்பு உயரும். குழந்தைகளால் மகிழ்வீர்கள்.

**தனுசு:** பண விவரகாரங்களில் நிதானமும், பொறுமையும் தேவை. வாகனங்களில் செல்லும்போது கவனம் தேவை. சம்பளம் உயரும்.

**மகரம்:** சிறிய ஆரோக்கியப் பிரச்சினை வந்து விலகும். தட்டிப் போய்க் கொண்டிருந்த விஷயம் இன்று இயல்பாய் முடியும். பொருளாதார பிரச்னை தீரும்.

**கும்பம்:** வீடு கட்டும் வேலை இன்று நல்ல முறையில் தொடங்கும். புதிய பொறுப்பு காரணமாக உங்களுக்கு சாப்பிடக்கூட நேரம் இருக்காது.

**மீனம்:** உங்களுக்கு பாராட்டு கிடைக்கும். நல்லதே நடக்கும். புதிய விஷயத்தை கற்பீர்கள். அன்பான சந்திப்பு நிகழும். நீங்கள் மதிக்கும் ஒருவரால் சந்தோஷம் வரும்.

# பாகிஸ்தானில் கல்லால் அடித்து ஒருவர் கொலை

பாகிஸ்தானில் மனநலம் குன்றிய ஒருவரை கும்பல் ஒன்று கல்லால் அடித்துக் கொலை செய்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள ஜங்கல் டேரா கிராமத்தில் முஸ்டாக் அகமது (வயது-40) என்ற மனநலம் குன்றியவரை குழுவொன்று இழுத்துச் சென்று மரத்தில் கட்டிவைத்து கல்லால் தாக்கி கொலை செய்துள்ளது. இவர் குர்ஆன் நூலின் பக்கங்களை கிழித்து, தீ வைத்து எரித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். வண்ணை கன்னாதிட்டி
# அருள்மிகு காளி அம்பாள் தேவஸ்தானம்

## பிலவ வருட (2022)



## தேர்த் திருவிழா சிறப்புமலர் – 15.02.2022

### தேர்த்திருவிழா (பொது உபயம்)

காலை 5.15 மணி ஸ்நபனாபிஷேகம்
காலை 7.00 மணி கொடிஸ்தம்ப பூஜை
காலை 8.00 மணி வசந்தமண்டப பூஜை
காலை 10.00 மணி அம்பாள் தேரில் எழுந்தருளல்
பகல் 12.30 மணி அம்பாள் பச்சை சாத்தி தேரினின்று இறங்குதல்
தொடர்ந்து நவசக்தி அர்ச்சனை, பிராயச்சித்தி அபிஷேகம் நடைபெறும்.

### "யாழ்ப்பாணம் கன்னாதிட்டி ஸ்ரீ அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்

ஈழ வள நாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாண நகரின் மத்தியில் திருவண்ணை கன்னாதிட்டியில் எழுந்தருளியிருக்கும் காளியம்பாள் கோயில் வரலாறு.

யாழ்ப்பாணம் வண்ணை நகர் ஸ்ரீவாலாம்பிகை சமேத ஸ்ரீவைத்தீஸ்வர சுவாமி கோயில் ஏறத்தாழ கி.பி.1774 ஆம் (ஒல்லாந்தர் காலம்) ஆண்டளவில் தமிழ் நாட்டில் ராஜதானியாக விளங்கிய தஞ்சாவூர் எனும் பேரூரில் இருந்து அழைத்து வரப்பட்ட விஸ்வப் பிராமண குலத்திலகமான வேத சாஸ்திர சிற்ப சாஸ்திர விற்பன்னருமான பிரம்ம ஸ்ரீ கண்ணாயிரம் ஸ்பதியார் அவர்களினால் வடிவம் பெறத்தொடங்கியது. இந்தக் காலகட்டத்தில் இவரும் இவருடைய சிஷ்யர்களும் தங்குவதற்காக கோயில் அமையும் இடத்திற்கு முன்பக்கமாக அமைந்துள்ள கன்னாதிட்டி வீதியில் அடியார்க்கு நல்லான் மடத்தலையென்னும் சோழ மந்திரியின் பெயரால் அமைக்கப்பட்டிருந்த முக்கியத்துவம் வாய்ந்த தடாகக் கரையில் விடுதி அமைக்கப்பட்டிருந்தது. அப்போது விஸ்வகர்மாக்களின் குல தெய்வமான காளிதேவிக்கு முதலில் இவ்விடத்தில் கோயில் கட்டி வழிபடத் தொடங்கினார்கள். இக்கோயில் கிட்டத்தட்ட 1775 ஆண்டு தொடங்கி நடைபெற்றதாக சான்றுகள் கூறுகின்றன. இந்தச் சுற்றாடலில் விஸ்வகர்மாக்கள் அதிகமாக வாழ்ந்து வந்ததனால் அவர்களினதும் முழு ஒத்துழைப்பில் இந்தக் கைங்கரியம் நிறைவேற்றப்பட்டது. மேலும் 19 ஆம் நூற்றாண்டில் 1800 ஆம் ஆண்டுப்பகுதியில் இக்கோயிலின் வளர்ச்சியில் 2 ஆம் கட்டடம் ஆரம்பமானது. இக்கோயிலின் ஸ்தாபகர்கள் வழிவந்த விஸ்வப்பிராமண குலத்தவர்களும் இன்னும் இக்கிராமத்து பெருங்குடி மக்களாலும் பொருளுதவப்பட்டு செங்கற்களால் முன்னர் இருந்ததை விட விசாலமாகக் கட்டப்பெற்று குடமுழுக்கு செய்யப்பட்டது என யாழ். அரச செயலகத்தில் பாதுகாக்கப்படும் செப்புச் சாசனங்களும், பதிவுகளும் கூறுகின்றன. அத்துடன் இக் காலங்களில் நடைபெற்று வந்த நவராத்திரி விழாக்களில் தினம் ஏறக்குறைய 100 பக்தர்கள் கலந்துகொள்வதாகவும் இந்தச் சான்றுகள் கூறுகின்றன. யாழ். அரச அதிபராக 1896 வரை கடமையாற்றிய சேர். டைக் துவைனம் அவர்களின் குறிப்புக்களிலிருந்து 1882 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாண கச்சேரியிலுள்ள சைவசமயக் கோயில் இடாப்பிலிருந்து எடுக்கப்பட்ட பிரதியே முதன்மைச் சான்றாக விளங்குகின்றது. இக்கோயில் உற்பத்திக்காலம் தொடங்கி சுமார் ஒரு நூற்றாண்டு காலம் வரை புராதன சம்பிரதாயங்களை பின்பற்றி இக்கோயிலின் நித்தியநைமித்திய பூஜை கைங்கரியங்களையும் இவ்வாதீனத்தைச் சேர்ந்த விஸ்வப் பிராமண குருமார்களே நடத்தி வந்தார்கள். இதில் முதலாவது குருவாக கடமையாற்றியவர் பிரம்மஸ்ரீ மல்லிகார்ஜீன் ஸ்தபதியார் ஆவார். இவருக்கு அடுத்தாற் போல் இவரது இளைய சகோதரர் பிரம்மஸ்ரீ பிரசன்னகுமார் ஆச்சாரியார் அவர்களும் அதன்பின் இவர்களின் மருமகனான மதுசூதன ஆச்சாரியாரும் ஆவார். ஆலய நித்திய நைமித்திய கருமங்கள் வேதாகம சாஸ்திரங்கள் விஸ்வப்பிராமண வம்சத்தாரின் பௌரோஹித்திய கருமங்கள் மறு சூக்தம், விஸ்வ சூக்தம் முதலிய வைதீக பிரயோகங்கள் வழியிலும் ஆருஹேயார்க ளால் திறம்பட நடைபெற்று வருகின்றன. இரண்டரை நூற்றாண்டுகளை அண்மித் திருக்கும் இக்கோயிலின் வரலாற்றில் விளம்பி வருடம் (21.01.2019) தைப்பூசத் தினத்தன்று நடைபெற்ற புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் குறிப்பிட்டு கூறப்படவேண்டியதொன்றாகும். மூலஸ் தானம் முதல் மஹாமண்டபம் யாவற்றிற் கும் புதிய கருங்கற்கள் பதிக்கப்பட்டு உட்பிரகார வீதி மேற்கூரைகள் முழுமையாக புதிய ஓடுகள் வேயப்பட்டும் இந்தியா வில் ராஜஸ்தான மாநில (Griant) தகட்டு கருங்கற்கள் உட்பிரகார நிலப்பகுதி முழு வதும் பதிக்கப்பட்டு. புனருத்தாரண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேலும் சித்திரத்தேர் புதிய யாழிகள் பொருத்தப்பட்டு வர்ணம் தீட்டி அழகுற காட்சி தருகின்றது. அடுத்த கட்டமாக ராஜகோபுரமும் மணிக்கோபுரமும் ஸ்தாபிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. இப்பகுதி வாழ் விஸ்வகுலமக்களும் அம்பாளின் மீது அளவற்ற விசுவாசம் கொண்ட அடியார்களினாலும் வழங்கப்பட்ட நிதியை கொண்டே யாவும் பூர்த்தி செய்யப்பட்டு இன்று யாழ்நகர் மத்தியில் மிகவும் சந்நித்தியம் கொண்ட காளி அம்பாளாக வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள்.




அம்பிகா நகை மாளிகை
இல.122, கஸ்தூரியார் வீதி,
80/15A, மாநகர சபை புதிய கட்டடம்,
யாழ்ப்பாணம்.
021 222 8444
077 711 0726

ஸ்ரீ சிவாஞ்சனா ஜுவல்லறி
இல.149A,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 9227
077 711 0220

தேர்த்திருவிழா சிறப்புற பிரார்த்திப்போர்

லக்கி ஜுவல்லறி
இல.205/C,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 9968
074 222 9968

இல.162இல் இயங்கிவந்த கடை தற்போது மாநகரசபை கட்டடத்தில் இயங்குகிறது.
ஸ்ரீ லக்சுமி ஜுவல்லறி
இல.162,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 9440
077 703 8772

தையல்நாயகி ஜுவல்லறி
இல.304,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 9967
077 769 6102

Ruby Jewellery
இல.227-229,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 6919

1960 ஆம் ஆண்டுமுதல் ...
சாரங்கா நகை மாடம்
சாரங்கா நாணயமாற்று சேவை
WESTERN UNION Ria
இல.157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 2226972, 021 222 8869
நியூ சாரங்கா ஜுவலரி
Hotline: 0773577212

NSR Wedding Halls
இல.01, 2ம் மாடி,
ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.
021 222 4452

கலைவாணி நகை மாளிகை
இல.(235) 111-B
077 711 1128

கன்னிஹா ஜுவல்லஸ்
இல.99 E,
யாழ்ப்பாணம்.
021 222 4448

Ishani Jewell Casting
Gold Workshop
Digital Technology
391, Kasthuriyar Road, Jaffna.
mail:ishanijewelcasting@gmail.com
Web:www.korajewells.com
021 222 4031, 021 222 8161
077 724 5965

The First Office in Jaffna
வீடு, காணி, வியாபாரம் வாங்க விற்க
111C, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
RE/MAX NORTH REALTY
83, Kannathiddy Road, Jaffna,
Sri Lanka.
+94 77 566 0000, +94 21 468 0780
www.remaxnorth.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராண வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி துன்னாலையம்பதி

# வல்லிபுரம் ஸ்ரீ சக்கராழ்வார் தேவஸ்தானம்

# தேர்த்திருவிழாச் சிறப்பு மலர் - 15.02.2022




## ஆலய வரலாறு தொடர்ச்சி..

பெற்ற சிறப்புப் பெற்றது எனலாம்.

இந்த ஆலயத்தின் மூலஸ்தானத்தில் சக்கரமே வைத்துப் பூசை நடை பெறுகின்றது. சூரிய வழிபாட்டிலும் வழிபாட்டுச் சின்னமாக சக்கரம் இடம்பெறு கின்றது. அதே நேரம் வைஷ்ணவர்களால் திருமாலின் சக்கரம் ஆயுதமாகப் பூசிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

ஆஞ்சநேயர் வழிபாடும் இங்கு சிறப்புப் பெற்றதைக் காணமுடிகின்றது. சமுத்திர தீர்த்தத்தின் போது சக்கரத்துடன் ஆஞ்சநேயரும் எடுத்துச் செல்லப்படுவார். புராதன மக்களுடைய நாகதம்பிரான் வழிபாட்டினையும் இங்கு காணலாம். இவ் ஆலயத்தில் நாகதோஷம் நீங்க நாகதம்பிரானுக்கு பல நேர்த்திக் கடன்களை அடியவர்கள் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது. நினைத்த காரி யங்கள் நிறைவேறவும், திருமணப் பாக்கியம், குழந்தைப் பாக்கியம் வேண்டியும் பல நேர்த்திக் கடன்களை ஆற்றி வேண்டியதை வேண்டியவர்களுக்கு அருளும் காத்தற் கடவுள் விஷ்ணு பகவானும் வீற்றிருக்கும் சிறப்புப் பெற்ற ஆலயமாக மிளிர்கின்றது.



வல்லிபுர ஆழ்வார் ஆலய தேரித்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்
நெல்லியடியில் பிரமாண்டமான புடைவை மாளிகை

செல்லமுத்தூஸ்
புடைவை மாளிகை

விதம் விதமான சாறிவகைகள்,
சல்வார் துணிகள், பஞ்சாபிகள்,
சேட், ரீசேட்
இன்னும் ஏராளமான
புடைவைகளுடன்
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
தொலைபேசி: 021 226 3238

வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

அழகிற்கு அழகு சேர்க்கும் பாரம்பரியம் மிக்க
அழகிய தரம் குன்றாத தங்க ஆபரணங்களை உங்கள்
எண்ணம் போல் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய ஒரே இடம்


ஸ்ரீகுமரன் நகை மாளிகை
Sree Kumaran Jewellers



74
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.
021 226 4465
077 873 3482
(CR 37560) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு விற்பனைக்கு
## (இறுதிநாள் 16.02.2022)

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி பகுதியில் 02 பரப்பு காணியில் அமைந்துள்ள 05 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. 01 அறை யுடன் இணைந்த மலசல கூடம் மற்றும் 02 மேலதிக மலசல கூட வசதிகள் உட்பட வீடு முழுவதும் நில மாபிள்கள் பதிக்கப்பட்டுள்ளன. மேலும் குடிநீர் கிணறு அமைந்துள்ளது.

வீடு வாங்க ஆர்வமுள்ளவர்கள் வீட்டு உரிமை யாளர்களின் வசதி கருதி முன் அனுமதி பெற்று புதன், சனி மற்றும் ஞாயிறு தினங்களில் மதியம் 12.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை மட்டும் பார்வையிட முடியும்.

**தரகர் தேவையில்லை.**

தொடர்புகளுக்கு **077 592 0054**

(CS 42786(3/6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 . 01 . 1932

மறைவு 25 . 02 . 2021

அமரர்

## பெரியதம்பி பாலசிங்கம்

அணையா ஒளி விளக்கே எங்கள் அப்பாவே
ஆண்டு ஒன்று கடந்து விட்ட போதிலும்
ஆறிடுமா எங்கள் இதயம்
இறுதி வழி சென்றாலும் இறைவன்
- வழி சென்றடைக

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"திருத்தணிகை"
உசன்
மிருசுவில்.

(cr.37557) (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 05.03.1948



மறைவு 12.02.2022

## திருமதி பத்மினிபரமேஸ்வரி பாலகிருஸ்ணன்

சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு உரும்பிராயை பிறப்பிடமாகவும், தேவாலய வீதி உரும்பிராய் கிழக்கு உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மினிபரமேஸ்வரி பாலகிருஸ்ணன் அவர்கள் கடந்த சனிக்கிழமை (12.02.2022) இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தையல்முத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலகிருஸ்ணன் அவர் களின் அன்பு மனைவியும், Dr.நிரஞ்சனா (கொழும்பு தேசிய வைத்திய சாலை), நிராஜினி (மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), டிஷானி (பொறியிய லாளர், அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யசோதரன் (ஆசிரியர், உரும்பிராய் இந்துக் கல்லூரி), அசோகன் (பொறியியலாளர் அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும், விவேகானந்தன் (ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர், கொழும்பு), நகுலேஸ்வரி (ஜேர்மனி), மகாதேவா (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும், வத்சலா, சந்திரா, சிவபாலன், தவமணி, சீலாவதி, காலஞ்சென்ற கணேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஷனஜன், டனோஷன் (யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்கள்), தருணிகன் (அவுஸ்ரேலியா), சத்விகா (அவுஸ் ரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2022) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்**
**077 634 1102 (மகள்)**

(cr.37576) (2.6)

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## சந்தைகள், இறைச்சிக்கடைகளினை குத்தகைக்கு வழங்குவதற்கான
## பகிரங்க ஏலக்கேள்வி அறிவித்தல் - 2022

சபையினால் கீழ்க்குறிப்பிடப்படும் சந்தைகளினை 2022 ஆம் ஆண்டின் (01.03.2022 - 31.12.2022) வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலக்கேள்விகள் கோரப்படுகின்றன.

ஏலம் நடைபெறும் திகதி : 2022.02.24 (வியாழக்கிழமை) முற்பகல் 11.00 மணி.
இடம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலக முன்றல், புத்தூர்

| தொ. இல | விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவ கட்டணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை (VAT,NBT நீங்கலாக) | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | | | |
| 01 | அச்சுவேலி பொதுச் சந்தையும் துவிச்சக்கரவண்டி தரிப்பிடமும் அச்சுவேலி பஸ் நிலைய வாகன தரிப்பிடமும் | 250.00 | 25,000.00 | 7,428,712.50 | |
| 02 | அக்கரை கடற்கரை – வாகன தரிப்பிடமும் சிற்றுண்டிச்சாலை மற்றும் சிறுவர் மகிழ்விடல் | 250.00 | 2000.00 | 51,150.00 | 500.00 |
| 03 | அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 10,000.00 | 1,250,042.00 | 1200.00 |
| 04 | வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | 250.00 | 2000.00 | 211,612.50 | |
| 05 | வளலாய் கோழியிறைச்சிக்கடை | 250.00 | 2000.00 | 218,325.82 | 250.00 |
| | **புத்தூர் உப அலுவலகம்** | 250.00 | | | |
| 01 | புத்தூர் பொதுச்சந்தை | 250.00 | 2000.00 | 259,875.00 | |
| 02 | நிலாவரை திறந்த வெளிச் சந்தையும் வாகன தரிப்பிடமும் | 250.00 | 2000.00 | 534,417.00 | |
| | **கோப்பாய் உப அலுவலகம்** | 250.00 | | | |
| 01 | கோப்பாய் ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 3000.00 | 467,775.00 | 2250.00 |
| | **உரும்பிராய் உப அலுவலகம்** | 250.00 | | | |
| 01 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 3000.00 | 517,583.35 | 2250.00 |
| 02 | உரும்பிராய் கோழியிறைச்சிகடை | 250.00 | 3000.00 | 364,650.00 | 2250.00 |

ஏலத்தில் பங்கு கொள்பவர்கள் கேள்விப்படிவக்கட்டணம் ரூபா 250.00 இனை செலுத்துதல் வேண்டும். **ஏலக்கேள்வியில் தெரிவுசெய்யப்படும் ஏலதாரர்கள் உடனடியாக மீளளிக்கக்கூடிய வைப்புத்தொகையினை சபைக்கு செலுத்துதல் வேண்டும்.**

ஏலத்தில் பங்குபெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையினை கொண்டு வருவதுடன் அதன் நிழற்படப்பிரதியையும் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ் அல்லது உரிய பெயரிலுள்ள மின்சாரப்பட்டியல் பிரதி அல்லது வங்கிக்கணக்குப்புத்தகத்தின் பிரதி ஏதாவதொன்று சமர்ப்பித்தல் வேண்டும்.

சித்தியடையும் கேள்விதாரர் கோரிய கேள்வித்தொகையினது 03 மாத தவணைக்கட்டணத்தினை 2022.02.25 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக சபையின் உப அலுவலகத்தில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும்.

தியாகராஜா நிரோஷ்
தவிசாளர்
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்
2022.02.15

# மரண அறிவித்தல்

## பரமேஸ்வரி இராசையா (யோகராணி)



மலர்வு 27.11.1939

உதிர்வு 14.02.2022

யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி இராசையா (யோகராணி) அவர்கள் நேற்று (14.02.2022) திங்கட்கிழமை இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான கந்தையா சின்னாஞ்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், துரை வீரசிங்கம், நீலறாணி, சறோயினிதேவி, காலஞ் சென்றவர்களான பத்மநாதன், பரிபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், குலேந்திரன் (கோண்டாவில்), லலிதா (அவுஸ்திரேலியா), றஞ்சி (சுவிஸ்), விக்னேஸ்வரன் (நாவலப் பிட்டி), மகாலிங்கம் (றஞ்சன் - நாவலப்பிட்டி), வசந்தா (கனடா), சிறிகாந்தன் (கனடா), பாமினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், றஞ்சிதமலர், மகாலிங்கம், கருணாகரன், றஞ்சினி, சிலோசனா, நந்தகுமார், மாலினி, காந்தரூபன் ஆகியோரின் அன்பு மாமியாரும், திலிபன், திலிபா, கபிலன், சுதர்சன், கஜனி, நளாயினி, றேமிதா, கோபிகா, வினோதன், ஆஷா, ஜஸ்மினா, யதீஸ்வரன், நிறோசன், நிவாசன், கிருசோபன், திலக்சன், அருண், அனுசியா, அபர்ணா, சிபானா, நிஷானா, ஐங்கரன், நிறோஜா, சிவானந்தன், சத்தியா, பிரியா சுதாகரன், கமலதீபன், லிங்கேஸ்வரன், அஜித்தன், துசாயினி, சிவாயினி, கஜலக்சி, காமினி, பிரவின், வினேயா, டிலான், அனுசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2022) செவ்வாய்க்கிழமை மதியம் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கிழக்கு, கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி, பத்மநாம லேன்,
(பத்மாவதி மண்டபம் அருகாமை)
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.


தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## நாகேசு தியாகராஜா

**Restaurant Chez LEON, Salle de fete Palais de l'epi d'or Villejuif, Palais de la terasse le Thullay- ஆகியவற்றின் உரிமையாளர்**



**தோற்றம் 15.11.1951** **மறைவு 11.02.2022**

யாழ், தச்சந்தோப்பு கைதடியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Villejuif வதிவிடமாகவும் கொண்ட நாகேசு தியாகராசா அவர்கள் கடந்த (11.02.2022) வெள்ளிக்கிழமை அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற நாகேசு, தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மகனும், பரமேஸ்வரி (தேவி) அவர்களின் அன்புக் கணவரும், அற்புதமலர் (ஜேர்மனி), ஆனந்தகுமாரி (பிரான்ஸ்), காந்தரூபி (பிரான்ஸ்), சிவகுமார் (பிரான்ஸ்), சிவானந்தம் (பிரான்ஸ்), செல்வமதி (பிரான்ஸ்), சிவலோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலச்சந்திரன் (ஜேர்மனி), சிறி (பிரான்ஸ்), ரத்னலிங்கம் (பிரான்ஸ்), சோபா (பிரான்ஸ்), சர்மிளா (பிரான்ஸ்). சுரேஸ் (பிரான்ஸ்), நந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், துரைசிங்கம் (இலங்கை), காலஞ்சென்ற கனகரத்தினம், திலகவதி (இலங்கை), தியாகபதி (பூசா-சுவீடன்). காலஞ்சென்றவர்களான திருஞானசம்பந்தம், தில்லைநடராசா மற்றும் திருலோகசிங்கம் (லெப்பை-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சரஸ்வதி (இலங்கை), கைலாசபதி (இலங்கை), சிவபாலன் (இலங்கை). ராதாகிருஷ்ணன் (நோர்வே), செல்வி (இந்தியா), லஷ்சுமி (பிரான்ஸ்), தங்கராசா (இலங்கை), பரமேஸ்வரி (மணி-இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரஜித்தனா, ஜெய்சாந், கஜித்தனா, சஞ்சிதா (ஜேர்மனி), சிறித்னா, சஜிதா. நிருஜன் (பிரான்ஸ்), கிஷாந்தன், கீர்த்திகா (பிரான்ஸ்), சினோஜா, சிவாஜன், சினோஜினி (பிரான்ஸ்), சினேகன். சினேதா, சினேஸ், சினேதாஸ், சினேசா (பிரான்ஸ்), லஷ்சிதா, சந்தோஸ் (பிரான்ஸ்), சிவானி, சினோஜன். சிவேதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

**ஒன்றுகூடல் தச்சன்தோப்பு கைதடி (தியாகராஜா தேவி இல்லத்தில் நடைபெறும்.) இலங்கை நேரம் பி.ப 01.00 மணிதொடக்கம் 5.00 மணிவரை.**

**இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

தொடர்புகளுக்கு:
குமார் - மகன் : 033612657353
சிறி - மருமகன் : 033664850770
லோகன் - மகன் : 033695613943
சின்ன கிளி - மகன் : 033698217475
லெப்பை - சகோதரன் : 033624185124
சுரேஸ் - மருமகன் : 033651963261
தம்பி - மருமகன் : 033651184479
தங்கராசா - மச்சான் : 0094766215953, 0094212217372
திலகா - சகோதரி : 0094771925818
சுமி - பெறாமகள் : 0094778272602

**தகவல்: குடும்பத்தினர்**

(CS 42894) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி மேனகா தனபாலசிங்கம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும், 19, செல்லர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேனகா தனபாலசிங்கம் நல்லூரானின் நற்கழல் நிழலில் நேற்று (14.02.2022) திங்கட்கிழமை மீளாத் துயில் கொண்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், மதனாம்பாள் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் பார்வதியம்மாள் தம்பதியரின் பாசமிகு மருமகளும், தனபாலசிங்கம் (தனம்) அவர்களின் பாசமிகு மனைவியும், ஜெயசீலன் (ஆணையாளர், யாழ். மாநகர சபை), கவிதா (லண்டன்) ஆகியோரின் அன்புமிகு தாயாரும், செல்வி. ரஞ்சனா, காலஞ்சென்ற மனோகரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், லங்கினி (ஆசிரியை, யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி), குமாரதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆருத்ரா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), அட்ஷரா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), அவ்வை (லண்டன்), அம்பை (லண்டன்) ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2022) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.30 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் எற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**இ.தனபாலசிங்கம் - (கணவர்)**
**த.ஜெயசீலன் (மகன்)**
**0777 265 026**
**கு.கவிதா (மகள்)**

**இல.19, செல்லர் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

(CS 18569) 1/6

# மரண அறிவித்தல்



## அருமைத்துரை சின்னம்மா

ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் சுதுமலை மற்றும் கோண்டாவிலை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட அருமைத்துரை சின்னம்மா அவர்கள் நேற்று (14.02.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியரத்தினம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபை - தனலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அருமைத்துரை அவர்களின் பாசமிகு மனைவியும், லலிதாதேவி, அருந்தவம், நந்தகுமார், விஜியகுமார், கிஸ்ணகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலதாசன், விஜயரட்ணம், சுகந்தி, தயாழினி, தாட்சாயினி ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, கந்தசாமி கனகராசா, முருகையா, தங்கதுரை, தவராசா, செல்வரஞ்சிதம் மற்றும் தேவிஅம்மா, சிவனேஸ்வரி, இராஜேஸ்வரி, தவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தினோஜிகா, டினோத், சனோத், சுமிந்தன், கீர்த்தனா, தர்சனா, சுதர்சன், நிதர்ஷினி, நிவேதா, ஜிலக்ஷனா, கஜனிகா, கவிக்குமார், டினோஷன், ஐஸ்வர்யன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அக்ஷரா, சர்வின் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் எற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**நாகநாதன் வீதி,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 460 7920**

(CS 18571)


**வீடு வாடகைக்குத் தேவை**

03 பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு யாழ் நகரப் பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு:
**071 685 9888**



# லக்சுமி மணிமண்டபம்

- திருமண வைபவம்
- பூப்புனித நீராட்டு விழா
- பிறந்த நாள் விழா
- விசேட ஒன்று கூடல் நிகழ்வுகள்

போன்ற நிகழ்வுகளுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்

## லக்சுமி மணி மண்டபம்

நிறுவனம் நடத்த விரும்புபவர்களும் தொடர்புகொள்ளலாம்

தொடர்பு: **இ.அன்னலக்சுமி**

**விளையாட்டு அரங்கு வீதி,**
**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**

அன்னலக்சுமி - 077 057 4218
பார்த்தீபன் - 077 041 7935
குமார் - 076 540 9082

(CS 42904) (2.6)


# மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 03 . 1945



மறைவு
13 . 02 . 2022

திருமதி

## அமிர்தாம்பிகை நடராசா (நெல்வரை)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டை மற்றும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அமிர்தாம்பிகை நடராசா (நெல்வரை) நேற்றுமுன்தினம் (13.02.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - செங்கமலம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் மூத்த மருமகளும், நடராசா (ஓய்வுபெற்ற காணி உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், விமலன் (கனடா), விஜிதா (காலாசார உத்தியோகத்தர் - நல்லூர் பிரதேச செயலகம்), விக்கிரமன் (கண்ணன்- கனடா), நர்மதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அருந்ததி (கனடா), செல்வகுமார் (ஆசிரியர் - யா/ ஒஸ்மானியா கல்லூரி), மதிவதனி (கனடா), பவானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சிவலிங்கம் அவர்களின் அன்புச் சகோதரியும், தர்மலிங்கம் (ஆனந்தபுரம்), குமாரவேலு (கிளிநொச்சி), காலஞ்சென்ற சச்சிதானந்தன் (வவுனியா), மங்கையர்க்கரசி (நெல்வரை - நெடுந்தீவு), சண்முகநாதன் (சண் மாஸ்ரர் - கனடா), தயானந்தராஜா (ஓய்வுநிலை அதிபர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), திருநாவுக்கரசு (லண்டன்), வசந்தராணி (வவுனியா) ஆகியோரின் மைத்துனியும், வித்தகன், சாமந்தி, மிதுனன், பிருந்தன், அபிராம், விஷானா, விஹாசா, அர்வின், ஹர்சன், சிந்தனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2022) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் முரசுமோட்டை 2 ஆம் யூனிட் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முரசுமோட்டை ஐயன்கோயில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**200/2, முரசுமோட்டை,**
**பரந்தன்.**

**தகவல் :**
**மகள் - விஜிதா செல்வகுமார்**
**077 444 5324**

(cs.42910) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணையசேவையில்...

கிக் கேபிள் அமைப்பானது உலகின் பல்வேறு நாடுகளுக்குத் தேவையான இணைய வசதிகளை இணைக்கின்றது.

வங்காள விரிகுடாவை அண்டிய கடற்பகுதியில் ஆழ்கடலில் பதிக்கப்பட்டுள்ள இந்த நீர்மூழ்கி வடத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, அவ்வப்போது கைத்தொலைபேசி மற்றும் விரிவலைவரிசை (ப்ரோட்பாண்ட்) இணைய இணைப்புகளுக்கு பாதிப்பு ஏற்படக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும், தொழில்நுட்பக் கோளாறை சீர்செய்வதற்கு எவ்வளவு காலம் தேவைப்படும் என்பதை மதிப்பிட முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நீர்மூழ்கிக் கேபிளானது சிங்கப்பூரில் இருந்து மலேசியாவின் பென்னாங், இலங்கை, சென்னை மற்றும் மும்பை மற்றும் ஓமானின் பர்கா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் புஜைரா ஆகிய மத்திய நிலையங்கள் ஊடாக இணைய சேவைகளுக்கான இணைப்பு வசதிகளை வழங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## திருத்துக;...

களைச் சரிசெய்து, அவற்றை உடனடியாகப் போக்குவரத்துக்குப் பயன்படுத்துமாறு, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

160 ரயில் பெட்டிகளுக்கான கொள்வனவுக் கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவற்றில் 120 ரயில் பெட்டிகள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள போதிலும், அவற்றில் 40 பெட்டிகள் மாத்திரமே போக்குவரத்துச் சேவையில் இணைக்கப்பட்டுள்ளன. போக்குவரத்துச் சேவையில் இணைக்கப்படாத ஏனைய பெட்டிகளை உடனடியாகச் சேவையில் இணைக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணித்தார்.

போக்குவரத்துச் சேவையில் இணைக்கக் கூடிய வகையில் இருப்பினும் சேவைக்குப் பயன்படுத்தப்படாதுள்ள பஸ்களைப் பழுதுபார்த்து, குறுந்தூரச் சேவைகளுக்குப் பயன்படுத்துமாறும் அதன்மூலம், கிராமிய மக்களின் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பு கிட்டுமென்றும், ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அனைத்துத் தொழிற்சங்கங்கள் மற்றும் ஊழியர்களுடன் நட்புணர்வுடன் பணியாற்றுவதன் மூலம், போக்குவரத்துக் கட்டமைப்பிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியுமென்றும் ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி, மக்களை ஒடுக்கும் தொழிற்சங்கப் போராட்டங்களை நிறுத்துவதற்கு, அனைத்துத் தரப்பினரும் புரிந்துணர்வுடன் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் எடுத்துரைத்தார்.

தற்போது சேவையில் அதிகப்படியான ஊழியர்கள் காணப்படுவது பிரச்சினையாக உள்ளதென்று அதிகாரிகள் எடுத்துரைத்த போது, எந்தவோர் ஊழியரையும் பணிநீக்கம் செய்யாது, உரிய பயிற்சிகளை வழங்கி, அவர்களிடமிருந்து அதிகபட்ச சேவையைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான முறைமையொன்றை உடனடியாகத் தயாரிக்குமாறும், ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். (அ-ஒ-இ)

## அகில...

மாகாண ஆளுநர் ஆகியோருக்கு அகில இலங்கை இந்துமாமன்றத்தால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதன் உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எவ்வித அனுமதியுமின்றி கிழக்குத்தெருவில் கத்தோலிக்க சொரூபம் ஒன்று கட்டப்பட்டது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று வருகிறது. கிழக்குத்தெரு வீதியில் திருக்கேதீச்சர பெருவிழாவை முன்னிட்டு, வரவேற்பு வாயிலில் அமைக்கப்பட்ட போது அதனை கத்தோலிக்கத்துறவி உட்பட சிலர் கூடி உடைத்து நிறுத்தியமை அனைவரும் அறிந்ததே. பல ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த திருக்கேதீச்சர சுற்றாடலை திட்டமிட்டு அசிங்கப்படுத்தும் முயற்சி கடந்த சில வருடங்களாகத் தொடருகிறது. இவ்விடயம் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுத்து திருக்கேதீச்சர சிறப்பை காக்குமாறு வேண்டுகிறோம்.

சுதேசிய மதமாகிய சைவசமயத்தை மன்னார் மாவட்டத்தில் தொடர்ந்து இழிவுபடுத்தும் செயல் முற்றுப்பெறுவதற்கு வழி செய்ய வேண்டும். சைவமக்கள் என்றும் மதவிவகாரத்தில் பகையை வளர்க்க விரும்புவதில்லை. எனினும் திட்டமிட்டுச் செயற்படும் இத்தகைய செயற்பாடுகள் சமய மோதல்களை உருவாக்கும்.

போர்ச்சூழலைப் பயன்படுத்தி பல ஏழை சைவச்சிறுவர்களை கடந்த காலங்களில் கிறிஸ்தவ மதக்குழுக்கள், மதம்மாற்றியமையை யாவரும் அறிந்ததே. கிழக்கில் பல சைவக் குடும்பங்களை இஸ்லாமிய மதத்தவர்கள் தினமும் மதம்மாற்றிய வண்ணம் உள்ளனர். இச்சூழ்நிலையில் சைவமக்கள் மிகுந்த அதிர்ச்சியோடு எதிர்காலம் என்னவாகுமோ? என்ற கேள்வியோடு வாழ்கிறார்கள். இவ்விடயம் தொடர்பாக தாங்கள் உடன் கவனம் செலுத்தி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (அ-ஒ-5)

## கோரிக்கை...

போராட்டத்தை மேற்கொண்டன.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு அருகில் ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணி, ஜனாதிபதி செயலகம் வரையில் சென்று நிறைவடைந்தது.

இதேவேளை - நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு நேற்றுமுன்தினத்துடன் ஒருவாரம் நிறைவடைந்துள்ள நிலையில், தமது சகல கோரிக்கைகளுக்கான தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

சம்பள முரண்பாட்டுக்கான தீர்வு உள்ளிட்ட 7 கோரிக்கைகளை முன்வைத்து தாதியர் சங்கம், நிறைவுகாண் மருத்துவ சங்கம், மேலதிக மருத்துவ சேவைகள் சங்கம் மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் உள்ளிட்ட 18 சுகாதார தொழிற்சங்கங்கள் கடந்த 7 ஆம் திகதி வேலை நிறுத்த போராட்டத்தை ஆரம்பித்தன. வேலை நிறுத்த போராட்டம் தொடர்பில் வழங்கப்பட்ட நீதிமன்ற உத்தரவுக்கமைய அரச தாதியர் சங்கம் போராட்டத்திலிருந்து விலகியுள்ள போதிலும், அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக மருத்துவ சேவைகள் அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்ட பின்னரும், ஏனைய 17 தொழிற்சங்கங்களும் தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுத்துள்ளன.

இதன் காரணமாக மருத்துவமனைகளில் நேற்றும் மருந்து விநியோகம், இரசாயன ஆய்வு கூட செயற்பாடுகள் மற்றும் கதிரியக்க பரிசோதனைகள் (ஸ்கான்) உள்ளிட்ட சேவைகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன. மருத்துவமனை சேவைகள் மாத்திரமின்றி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டு வந்த கொவிட் தடுப்பூசி வழங்கும் பணிகளும் முடங்கியுள்ளன.

அரச மருத்துவமனைகளில் வேலைநிறுத்தப்போராட்டத்தின் காரணமாக மருந்து விநியோகம் முற்றாக முடங்கியுள்ளமையால் நாடளாவிய ரீதியிலுள்ள அரச 'ஒசுசல வளாகங்களில் மருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்காக நோயாளர்கள் நீண்ட வரிசைகளில் காத்திருப்பதை நேற்றும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

வேலை நிறுத்தப் போராட்டம் குறித்து சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கருத்து வெளியிடுகையில், வேலை நிறுத்த போராட்டம் விரைவில் நிறைவுக்கு வரும் என்று எதிர்பார்க்கின்றோம். சுகாதார அமைச்சர் என்ற ரீதியில் செய்யக் கூடிய விடயங்களை செய்ய முடியும் என்று கூறுவதைப் போன்றே, முடியாதவற்றை முடியாது என்றும் கூறுவேன் - என்றார்.

சுகாதார அமைச்சரின் கருத்து தொடர்பில் ஒன்றிணைந்த சுகாதார தொழிற்சங்கத் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவிக்கையில்; மூன்றரை மாதங்களாக பேச்சுக்கு கோரிக்கை விடுத்த போது அதற்கான சந்தர்ப்பத்தை வழங்காமல், தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை அறிவித்த பின்னரே பேச்சுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. இருப்பினும் மறுபுறத்தில் போராட்டத்தை முடக்குவதற்காக நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெறப்பட்டுள்ளதோடு, அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தி வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது. போராட்டத்தை முடக்குவதற்கு முயற்சிக்காமல் பேச்சு ஊடாக தீர்வை வழங்குமாறு வலியுறுத்துகின்றோம் -என்றார். (அ-ஒ-இ)

## இலங்கையின்...

முழுவதிலுள்ள நிபுணர்களை சர்வதேச உரிமைக் குழுக்கள் ஒன்றுசேர்த்துள்ளன. இலங்கைக்கான புதிய பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தை ஐக்கிய நாடுகள் உருவாக்கியுள்ள நிலையில் இது இடம்பெறுகின்றது. இந்த வட்ட மேசைக் கலந்தாய்வு இன்று நிகழ்நிலையில் இடம்பெறுவதுடன் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் தென் ஆபிரிக்கா விலுள்ள மனித உரிமைகளுக்கான அமைப்பு மற்றும் இலங்கையில் ஜனநாயகத்துக்கான பத்திரிகையாளர்கள் ஆகியன ஒன்றாக இணைந்து நடத்துகின்றன. இந்த நிகழ்வில் ஐ.நா.வின் இலங்கைகான பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தை பலப்படுத்துவது பற்றிக் கலந்துரையாடப்படும். (அ-ஒ-7)

## தாக்குதல்...

வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த வன்முறைக்கும்பல் வீட்டின் முன்கதவு, தகரங்கள், வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளது. வீட்டின் கதவை திறக்க முடியாத நிலையில் வன்முறைக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது. (ஒ-125)

## சிவில்...

கைது செய்யப்பட்டுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் குறித்து இவர் 2019ஆம் ஆண்டு வெளிப்படையாகப் பேசியிருந்தார். இது ஒரு அரசியல் சதி என்று கூறிய கமகே, இது குறித்து விசாரணை நடத்துமாறு அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தார். ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், கடந்த ஆண்டு இலங்கை கத்தோலிக்க திருச்சபையால் முன்மொழியப்பட்ட கறுப்புக் கொடி பரப்புரையை ஒழுங்குபடுத்துவதிலும் இவர் முக்கிய பங்காற்றினார். ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்த அவரது கருத்துக்கள் குறித்து ஓகஸ்ட் 2021 இல், குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டார்.

ஷெஹான் மாலக கமகே நேற்றுக் கைது செய்யப்பட்ட போதிலும், அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கான சரியான காரணத்தை பொலிஸார் இதுவரை வெளியிடவில்லை. (அ-ஒ-இ)

## கருத்தரங்கம்...

தொனிப் பொருளில் தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கருத்தரங்கம் ஒன்றை நடத்தவுள்ளன. கடந்த சனிக்கிழமை இந்தக் கருத்தரங்கை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும், மழை காரணமாக நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

## வருகிறார்...

வரவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

இலங்கை இன்று எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பில் இந்தியா கரிசனை கொண்டுள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சரின் அழைப்பையேற்று நான் அங்கு சென்றிருந்த வேளை, இதை உணரமுடிந்தது. இலங்கைக்கு உதவிகள், ஒத்துழைப்புகள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் எல்லாம் இந்தியா நேசக்கரம் நீட்டியுள்ளது. தற்போதும் பெரியதொரு கடன் தொகை கிடைக்கப்பெறவுள்ளது.

இலங்கை வருமாறு இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு நான் அழைப்பை விடுத்தேன். அதனை ஏற்று அவர் எதிர்வரும் மார்ச் 18 அல்லது 20 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

அதேவேளை, பிம்ஸ்டெக் அமைப்பின் அரச தலைவர்கள் மாநாடு மார்ச் 31 ஆம் திகதி இலங்கையில் நடைபெறுகின்றது. இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மியன்மார் மற்றும் தாய்லாந்து ஆகிய 7 நாடுகள் பிம்ஸ்டெக் அமைப்பில் அங்கம் வகிக்கின்றன. உலக சனத்தொகையில் 22 வீதமானோர் இந்நாடுகளில்தான் வாழ்கின்றனர். கடல் பாதுகாப்பு, சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரம் தொடர்பில் அவ்வமைப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

இவ்வமைப்பின் நடப்பு தலைமைப்பொறுப்பு இலங்கை வசம் உள்ளது. அடுத்ததாக தாய்லாந்து பொறுப்பேற்கவுள்ளது. கொழும்பில் நடைபெறும் மாநாட்டில் பங்கேற்குமாறு மேற்படி 7 நாடுகளில் அரச தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நான் இந்தியா சென்றிருந்தவேளை, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால், இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டிருந்த அழைப்பிதழை, இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் கையளித்தேன் - என்றார். (அ-ஒ-44)

## கொள்ளை...

பிரித்து உள்ளே நுழைந்த மூன்று கொள்ளையர்களும் முகத்துக்கு துணிகளை கட்டியிருந்தனர். வீட்டில் இருந்தவர்களை கத்தி முனையில் அச்சுறுத்தியுள்ளனர். பின்னர் வீட்டிலிருந்த 15 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளை அடித்துச் சென்றதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஒ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஊரைக்...*

மென்றே அவருக்குத் தெரியாது. அவர் கதைப்பதும் விளங்காது - இவ்வாறு வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் செயலருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் நாட்டு மீனவர்களும்- இலங்கை மீனவர்களும் அடிபட்டு சாக வேண்டும் என்பதற்காகவே இலங்கை அரசு மீனவர்களின் பிரச்சினைகளை தூண்டி விட்டு வேடிக்கை பார்க்கின்றது.

2017 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு படகு ஒழுங்குபடுத்தல் சட்டம் மற்றும் இழுவை மடி தடைச் சட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். தமிழக மீனவர்களை நாம் விரோதியாக பார்க்கக்கூடாது. ஒரு பிரச்சினைக்கு தீர்வு உண்டு. அதைப் பயன்படுத்தி தீர்வைக் காண வேண்டும். எமக்கும் தமிழகத்துக்குமான உறவை அறுத்து விட அதிக எண்ணிக்கையான ஆள்கள் உள்ளனர்.

அன்று சந்திரிகா அம்மையார் கடலுக்குள் மீனவர்களை இறங்குவதற்கு தடை விதித்தார். அப்போது நான் மருத்துவமனையில் இருந்து, மாவை.சேனாதிராசா உள்ளிட்டோர் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்து வெற்றி பெற்றனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற போராட்டத்தில் ஆவேசமாக செயற்பட்டார். அது கண்டிக்கத்தக்கது - என்றார்.

(அ-ஒ-27)

*சர்வதேசமே!...*

யுடன் செயற்படுகின்றது. உள்ளகப் பொறிமுறையில் முன்னேற்றம் கண்டுள்ளது. சர்வதேசத்திடம் இருந்து நட்பு ரீதியான அணுகுமுறையையே எதிர்பார்க்கின்றது-இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 49 ஆவதுகூட்டத்தொடர் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இதன்போது இலங்கை தொடர்பான எழுத்து மூல அறிக்கை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் முன் வைக்கப்படும். அந்த அறிக்கை மார்ச் 03 ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். மேற்படி எழுத்து மூல அறிக்கையின் பிரதியொன்று இன்று (நேற்று) எமக்கு கிடைக்கப்பெறும். அது தொடர்பில் எமது நிலைப்பாடு ஐந்து நாள்களுக்குள் அறிவிக்கப்பட வேண்டும். அந்த வகையில் அதற்கான ஆவணம் மிகவும் அவதானத்துடன் தயாரிக்கப்படும். பெப்ரவரி 19 ஆம் திகதிக்கு முன்னர் அது ஜெனிவாவுக்கு அனுப்பப்படும்.

நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே நாம் ஜெனிவாத் தொடரில் பங்கேற்கின்றோம்.

உலகில் இன்று பல பிரச்சினைகள் உக்கிரமடைந்துள்ளன. அவை இன்று வெடிக்கும் கட்டத்துக்கு வந்துவிட்டன. இப்படி உலகில் பல பிரச்சினைகள் இருக்கும்போது, இலங்கை மட்டும் இலக்கு வைக்கப்படுவது ஏன்? இது நியாயமா? உலக அமைதிக்கு இலங்கையால் எந்தவொரு பிரச்சினையும் ஏற்படுவதில்லை. நல்லிணக்கம் தொடர்பில் கவனம் செலுத்தப்படும். இது உணர்வுப்பூர்வமான விடயமாகும். இப்பிரச்சினைக்கு ஒரே இரவில் தீர்வை கண்டுவிடமுடியாது. நீடித்து நிலைக்கக்கூடிய நிலையானதொரு தீர்வை நாம் எதிர்ப்பார்க்கின்றோமெனில், அதற்கான பொறிமுறை நாட்டின் கலாசாரம் மற்றும் நாட்டு மக்களின் அபிலாஷைகளுக்கமையவே தயாரிக்கப்பட வேண்டும். இது தொடர்பில் எமது நாட்டில் பரந்துப்பட்ட விடயங்கள் இடம்பெற்றுள்ளன. இதனை சர்வதேசம் ஏற்க வேண்டும். பக்கச்சார்பின்றி இலங்கை தொடர்பில் பார்வையை செலுத்த வேண்டும்.

மனித உரிமை விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிப்பதற்காக உயர் நீதிமன்ற நீதியரசர் நவாஸ் தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்த குழுவின் அறிக்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் இன்னும் ஒரு வாரத்தில் கையளிக்கப்படவுள்ளது. கடந்த காலங்களில் நியமிக்கப்பட்ட குழுக்கள் தொடர்பிலும் ஆராய்வது இந்தக்குழுவின் பணியாக இருந்தது. மேற்படி குழு யாழ்ப்பாணத்துக்கும் சென்றது. சாட்சியங்களைத் திரட்டியது.

காணாமல்போனோர் அலுவலகம், இழப்பீட்டு பணிகள், நல்லிணக்க செயலணி, மனித உரிமைகள் ஆணைக்குழு என பல உள்ளக பொறிமுறைகள் உள்ளன. இவற்றின்மூலம் பலனும் கிடைத்துள்ளன. இவை தொடர்பில் கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் தூதரகங்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளோம். ஜெனிவாவிலுள்ள தூதுவர்களுக்கும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

வெளிப்படைத் தன்மையுடன் இலங்கை செயற்படுகின்றது. எமது நாட்டுக்கு வாருங்கள். அது தொடர்பில் விசாரணை நடத்துங்கள். அதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளோம்.

சர்வதேசத்துடன் இணைந்து செயற்பட நாம்தயார். நட்புரீதியான அணுகுமுறையே வேண்டும். இதனை இந்தமுறை மாநாட்டில் அறிவிப்போம் - என்றார். (அ-ஒ-44)

*போராட்டக்காரர்களை...*

நீதிமன்ற உத்தரவுக்கு ஒவ்வொரு பிரஜையும் கட்டுப்பட வேண்டுமென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொதுவாக நியாயமான காரணங்களுக்காகவே நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பிக்கும். சுகாதாரப் பிரிவுகளிலுள்ள ஒவ்வொரு குழுக்களாலும் முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கை சமூகத்துக்கும் மக்களுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். அதன் காரணமாகவே நீதிமன்ற தடை உத்தரவை பெற்றுக்கொடுத்துள்ளது. நாட்டிலுள்ள எந்தவொரு பிரச்சினை ஏற்பட்டாலும் அதற்கு நீதியான தீர்வைக் கேட்டு மக்கள் நீதிமன்றமே செல்ல வேண்டும். நீதிமன்றத்தால் வழங்கப்படும் தீர்ப்பை ஜனாதிபதி முதல் சகலரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இருந்தபோதிலும், தன்னிச்சையாக, சமூக விரோதிகளாக இந்தத் தொழிற்சங்கள் நீதிமன்ற உத்தரவை மதிக்காமல் செயற்படுமாக இருந்தால் அவ்வாறானவர்களை உடனடியாக கைதுசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (அ-ஒ-இ)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 37 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 14 அடி பாதையுடன் தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்.

நிலப்பரப்பு

**A-32** பிரதான வீதியில் இருந்து **500 m** தூரம்.

பயன்தரும் 190 தென்னைகள் உள்ளன. நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன (பைப் லைனிங்). பார்வையிடும் நேரம்: காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.

ஒரு பரப்பின் விலை **350,000/=**

தரகர் தேவையில்லை.

தொடர்பு: **077 814 7389**
**077 117 8578**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 30 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்

**A-32** பிரதான வீதியில் இருந்து **400 m** தூரம்.

பார்வையிடும் நேரம்:

காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.

ஒரு பரப்பின் விலை **300,000/=**

தரகர் தேவையில்லை.

தொடர்பு: **077 814 7389**
**077 117 8578**

## பெண் வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் நிறுவனமொன்றிற்கு கணினி அறிவுள்ள ரைப்பிங் தெரிந்த அலுவலக உதவியாளர் தேவை.

உங்களுடைய சுயவிவரக்கோவையை Whatsapp மூலம் அனுப்பி வைக்கவும்.

**077 5555 100**

(CS 18567) 1-

## வீடு வாடகைக்கு

அரியாலை கனகரத்தினம் வீதி, 39 ஆம் நம்பர் வீடு வாடகைக்கு கொடுக்கப்படும். நான்கு அறைகள் வரவேற்பறை, சமையலறை, Toilet

வட்சப் வைபர் }+ 4179 682 7934

(cs 18562) (2.6)

## கல்வி நிலைய தளபாடங்கள் உபகரணங்கள் உடனடி விற்பனைக்கு

பின்வரும் தரமான கல்வி நிலைய உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு

- ✓ மேசை
- ✓ வாங்கு
- ✓ CCTV கமராசெட்
- ✓ Photo Copier
- ✓ White Board
- ✓ Plastic Chairs
- ✓ Tables

தொடர்புகளுக்கு :

**077 602 0376**

## மரண அறிவித்தல்

தோற்றம்
13
.
01
.
1953



மறைவு
14
.
02
.
2022

### பாலசுப்பிரமணியம் கமலாம்பிகை

நல்லூரை பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் கமலாம்பிகை நேற்று (14.02.2022) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ரங்கநாதன் புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், நிவேதா, சுவேதா, விஜிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகுமார், சயந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், யதுஷன், மிதுஷன், கிருஜன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2022) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைகள் குப்பிளான் காடா கரம்பை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் எற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**இராஜஇராஜேஸ்வரி வீதி,**
**புன்னாலைக்கட்டுவன் வடக்கு,**
**புன்னாலைக்கட்டுவன் .**

**தகவல்:**
**மருமகன் - சிவகுமார்**
**(கோண்டாவில்)**
**077 4934 245**
**077 603 8508**

(CS 18566) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.